# ஆசார்ய வ்ருக்ஷம்

(மின் இதழ் --ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்ரமம் கோவை)

## சிறப்பு இணைப்பு

# ஸ்வாமி
# ராமானுஜரின்
## 1005 வது திருநக்ஷத்திரம்



# ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



**சித்திரம் --மாலதி பாலாஜி மும்பை**



திருநாராயணபுரம்

**ராமானுஜ ஸித்தாந்தம் என்பது, ஆசார்ய சிஷ்ய பரம்பரையாகத் தொடர்ந்து வரும் உபதேசங்கள்.**




***ச்ருத்யர்த்த தத்துவ விக்ஞாத்ரே பக்தி மார்க்க ப்ரதர்சினே I***
***இராமாநுஜாய முனயே மங்களம் புவி சாச்வதம் II***




**தேசமெலாம் உகந்திடவே பெரும்பூதூரில் ,**
**சித்திரையில் ஆதிரைநாள் வந்துதோன்றி ***
**காசினிமேல் வாதியரை வென்று , அரங்கர்-**
**கதியாக வாழ்ந்தருளும் எதிராசா ** முன்**
**பூசுரர்கோன் திருவரங்கத்தமுதனார் , உன்**
**பொன்னடிமேல் அந்தாதியாகப் போற்றிப்**
**பேசிய * நற்கலித்துறை நூற்றெட்டுப்பாட்டும் ,**
**பிழையறவே எனக்கருள்செய் பேணிநீயே.**

---- பிரபந்த ஸாரம், ஸ்வாமி நிகமாந்த தேசிகன்





சித்திரம் :: வீ.கோபாலகிருஷ்ணன், பெங்களூரு

# ஸ்ரீ இராமனுஜர் அவதரித்த தலம் தான்
# தொண்டை மண்டலத்தில் அமைந்துள்ள
# ஸ்ரீ பெரும்புதூர்





# ராமானுஜரின் 1005வது திருநக்ஷத்திர சிறப்பு இணைப்பு

## பொருளடக்கம்


| | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாஷ்யகாரரும் ஸ்ரீ பாஷ்யமும் | 1 |
| 2 | ராமானுஜரின் 216 அடி மகத்தான சிலை | 2 |
| 3 | நல்லார் பரவும் இராமானுசன் | 4 |
| 4 | உலகெல்லாம் துதிக்கும் கருணை கடல் | 9 |
| 5 | ஸ்வாமி ராமானுஜர் கொடுத்த சீட்டு | 12 |
| 6 | உடையவரின் உயர்ந்த அச்சம் | 14 |
| 7 | எம்பெருமானாரின் ப்ரபாவம் வைபவம் | 16 |
| 8 | காரேய் கருணை ராமானுச | 19 |
| 9 | எழில் மிகு எதிராஜர் | 21 |
| 10 | ராமானுஜருடைய 72 கட்டளைகள் | 23 |
| 11 | ராமானுஜரின் வரலாறு -குருவை மிஞ்சிய சீடர் | 27 |
| 12 | 1005 ஆண்டுகளாக ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் ராமானுஜர் | 30 |
| 13 | ராமானுஜர் இயற்றிய நூல்கள் | 32 |
| 14 | முக்திக்கு வர்ணம்-ஜாதி தடையில்லை | 33 |
| 15 | துலுக்க நாச்சியார் | 34 |
| 16 | ஸ்வாமி ராமானுஜரின் திருக்கோஷ்டியூர் விஜயம் | 35 |
| 17 | குரு பரம்பரை வைபவம் – ஸ்ரீ ராமானுஜர் | 39 |
| 18 | ஸ்ரீ ராமானுஜர்-ஒரு கவிதை | 44 |


**இராமானுசர் திருவாய்மொழியின் செவிலித்தாய் எனப் போற்றப்படுபவர். தமிழ்நெறி போற்றும் வைணவர்.**



# ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ரீபாஷ்யமும்

மோக்ஷத்தில் விருப்பமுள்ள ஜீவாத்மாக்கள் செய்யவேண்டியவை, கூடாதவைகளை பகுத்து அறிவதற்காக ஸ்ரீமந்நாராயணன் வேதாந்தத்தை அவர்களுக்கு அளித்தார். தன்னுடைய அவதாரங்கள் மூலம் வேதாந்த ஜ்ஞாநத்தை அவைகளின் அனுஷ்டானத்தை உலகில் நன்றாகப் பரவச் செய்தான். யுகங்கள் கழிய, அந்த ஜ்ஞான ஒளி மங்கும் நிலை ஏற்படவே, ஸ்ரீமந்நாராயணனே தானே பராசர மகரிஷிக்கு புதல்வராகத் தோன்றினார். அவருக்கு த்வைபாயனர், க்ருஷ்ணன் என்கின்ற திருநாமங்கள் இடப்பட்டன. பிறகு கலந்து குவிந்திருந்த வேதங்களை நான்காக பகுத்து அவைகளை அத்யயனம் செய்வதற்கு உபதேசித்தார். வேதங்களை நான்காக பகுத்துத்து அருளியதால் வேதவ்யாஸர் என்றப் பெயரையும் பெற்றார். தொடர்ந்து தன் சிஷ்யர் ஜைமினி மஹரிஷியைக்கொண்டு கர்ம காண்டம் என்றும் பூர்வமீமாம்ஸா என்றும் சொல்லப்படும் 12 அத்யாயங்கள் கொண்ட ஸூத்ரங்களை எழுதச்செய்தார். காசக்ருத்ஸ்ந ரிஷி 4 காண்ட ஸூத்ரங்களை செய்வித்தார். ப்ரஹ்ம ஸ்வரூபத்தை விவரிக்கக் கூடிய உத்தர மீமாம்ஸையை நான்கு அத்யாயங்களாய் வியாஸர் தானே 545 ஸூத்ரங்களை செய்தார்.

இந்த சூத்ரங்கள் சுருக்கமானவை. விரிந்த பொருளைத் தரக்கூடியவை. தேவையற்ற அநர்த்தமான சப்தங்கள் இல்லாதவை. தோஷமற்றவை. இத்தகைய ஸூத்ரங்களுக்கு இலக்கணமாகத் திகழ்வது வியாஸரின் ப்ரஹ்ம ஸூத்ர இலக்கியம். யோக தசையில் மந்த்ரங்களை நேரில் காண்பவர்களான ரிஷிகளே இந்த ஸூத்ரங்களின் அர்த்தங்களை அறியத்தக்கவர்கள். அப்படி த்ருஷ்டியால் உணர்ந்திருந்த போதாயன மஹரிஷி ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு விரிவான விருத்தி கிரந்தத்தை ஏற்படுத்தினார். இந்த போதாயன விருத்தி கிரந்தத்தை மூலமாகக் கொண்டு ஸ்ரீ ராமானுஜர் ப்ரஹ்மசூத்ரத்திற்கு வியாக்யானம் எழுதினார். இந்த கிரந்தம் ராமானுஜரின் ஸ்ரீ பாஷ்யம் என்று பெருமையுடன் இன்றும் வித்வான்களால் போற்றப்படுகிறது.

# ராமானுஜரின் 216 அடி உயர சிலை
## சிறப்பு அம்சங்கள்



**ஹைதராபாத்:** இந்து மதத் துறவியும், சமூக சீர்திருத்தவாதியுமான ராமானுஜரின் 216 அடி சிலையை பிரதமர் மோடி பிப்ரவரி 5ஆம் தேதி ஹைதராபாத்தில் திறந்து வைத்துள்ளார் .

11-ஆம் நூற்றாண்டில் தீண்டாமைக்கு எதிராக குரல் கொடுத்த இந்து மதத் துறவி ராமானுஜர். தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த ராமானுஜர், உலகமெங்கும் சமத்துவம் பரவ, தீண்டாமை ஒழிய பாடுபட்டார். வைஷ்ணவ குருமார்களில் முக்கியமானவரான ராமானுஜருக்கு 216 அடி உயர சிலை ஹைதராபாத்தின் புறநகர் பகுதியான ஷம்ஷாபாத்தில் 45 ஏக்கர் வளாகத்துக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ளது. 'சமத்துவத்துக்கான சிலை' (Statue of Equality) என வர்ணிக்கப்பட்டுள்ளது .

**சிறப்பம்சங்கள்:** இந்த சிலை முழுக்க முழுக்க பக்தர்களின் நன்கொடைகளை பெற்று சுமார் ரூ.1,000 கோடி செலவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ராமானுஜர் இந்த பூமியில் 120 வருடங்கள் வாழ்ந்ததை நினைவுகூரும் வகையில் 120 கிலோ தங்கத்தைக் கொண்டு இந்த சிலையின் கருவறை அமைக்கப்பட்டுள்ளது. கருவறை அமைந்துள்ள உள் அறையை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பிப்ரவரி 13-ஆம் தேதி திறந்து வைக்கவுள்ளார்.

கருவறை தங்கத்தால் செய்யப்பட்டுள்ள அதேநேரத்தில் 216 அடி கொண்ட வெளிப்புறச் சிலை, உட்கார்ந்த நிலையில் உள்ள உயரமான சிலைகளில் ஒன்றாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தங்கம், வெள்ளி, தாமிரம்,

பித்தளை மற்றும் துத்தநாகம் என ஐந்து விதமான உலோகங்களின் கலவையான 'பஞ்சலோஹா' சிலையாக நிறுவப்பட்டுள்ளது. ராமானுஜர் சிற்பம் மெல்கோட் மற்றும் ஸ்ரீரங்கம் கோவில்களில் உள்ள ராமானுஜரின் செதுக்கப்பட்ட கல் உருவங்களை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.
உட்கார்ந்த நிலையில் உள்ள உயரமான சிலைகளில் தாய்லாந்தில் அமைந்துள்ள 302 அடி கொண்ட புத்தர் சிலையே உலகின் மிகப்பெரிய சிலையாக இருந்து வருகிறது. இதற்கடுத்ததாக, உலகின் இரண்டாவது பெரிய சிலை என்ற பெருமையை ராமானுஜரின் 216 அடி சிலை பெறவுள்ளது.




சிலை அமைக்கப்பட்டுள்ள 45 ஏக்கர் இந்த வளாகத்தில்108 திவ்ய தேசங்கள், ஆழ்வார்கள், தமிழ் துறவிகளின் படைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள விஷ்ணு கோயில்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன. மேலும், இதே வளாகத்தில் 'பத்ரா வேதி' என பெயரிடப்பட்ட 54 அடி உயர அடித்தள கட்டிடம், வேதங்களுக்கான டிஜிட்டல் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம், பண்டைய இந்திய நூல்கள் அடங்கிய நூலகம், ஒரு கல்விக் கூடம் ஆகியவற்றுடன் ஒரு தியேட்டர் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளன.
ராமானுஜரின் 1,000-வது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் இந்த சிலை அமைக்கும் பணி கடந்த 2014-ம் ஆண்டே தொடங்கப்பட்டது. திறப்பு விழா அன்று சிலை வளாகத்தில் 1,035 யாகம் உட்பட ஆன்மிக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இந்த விழாவில் பல்வேறு மாநில முதல்வர்கள், அரசியல்வாதிகள், பிரபலங்கள் மற்றும் நடிகர்கள் கலந்துகொண்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*******

ஸ்ரீ:

# நல்லார் பரவும் இராமானுசன்

[ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு]

"தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய அவதாரத்தின் நோக்கத்தைத் தாமே வெளியிட்டருளினார். அதுபோல் எம்பெருமானின் ஒவ்வொரு அவதாரத்துக்கும் ஒரு நோக்கமுண்டு. இதையே அவதாரரஹஸ்யம் என்பர். இந்த அவதார ரஹஸ்யமானது ஆழ்வார், ஆசார்யர்களின் அவதாரங்களுக்கும் உண்டு. இவர்கள் இவ்விருள்தருமாஞாலத்தில் வந்தவதரித்தது கருணையின் காரியமே. நம்மைப்போல் கர்மமடியாக வந்த, முன்வினைப் பயனால் வந்த பிறப்பன்றே இவர்கள் பிறப்பு! எம்பெருமானின் அவதாரத்துக்கிணையான ஏற்றம் இவர்களின் அவதாரத்துக்குமுண்டு. எனினும் ஒரு வேறுபாடுமுண்டு. அவன் தன்னிச்சையால் பூமியில் வந்து பிறக்கிறான். இவர்களோ தன்னிச்சையாலன்றி எம்பெருமானின் இச்சையால் பூமியில் வந்து அவதரிக்கிறார்கள். எனவே இவர்களவதரிப்பதற்கும் ஒரு உயர்ந்த நோக்கமுண்டு என்பது தெளிவாகிறது.

ஓடியோடி பலபிறப்பும் பிறந்து, களைத்திருக்கும் ஜீவர்கள் வாடி வாடும் இவ்வுலக வாழ்வில் தேடியோடும் ஒரு மெய்யான, நீங்காத செல்வத்தைக் காட்டி, அம்மாநிதியைப் பெறும் வழியையும் காட்டித் தரவென்றே தாய் போலிரங்கும் தன் தனித் தன்மையினால் பகவான் ஸங்கல்பிக்க அதன் பயனாய் வந்தவதரித்தவர்கள் இவர்கள். இங்ஙனம் அவதரித்து வேதத்தையும் வேதத்தின் சுவைப் பயனாகிய எம்பெருமானையும் தெளியக் காட்டி, கலக்குவாரும் கலங்குவாருமில்லா உயர் ஞானத்தொரு உலகினை உருவாக்கி வெற்றிகண்டவர் பகவத் ராமானுஜர்.

**பகவத் ராமானுஜர்**

பயிரில் களைபோல் அசுரரைக் காய அவதரித்தவர். வேதாந்தமெனும் விளைநிலத்தின் களைகளை, வேதத்திற்குப் புறம்பாகவும், மாறாகவும் சொல்லப்பட்ட பொருள்களாகிய களைகளை அகற்ற அவதரித்தவர் இவர். குருகையில் வந்து கொழுப்படக்கிய நம் குலபதி மாறன் சடகோபனின் மறைகாட்டும் முறையான வழிகாட்டியருள சீலமிகு சித்திரையில் அருள்மிகு ஆதிரையில் வண்மைமிகு வள்ளலாய் வந்தவதரித்தவர்.

**நல்லார் இருவர்**

"யதா தேவே ததா குரௌ" என்னும் வேத வாக்குப்படி தெய்வத்துக்கிணையாக ஆராதிக்கப்பட வேண்டியவர்களன்றோ ஆசார்யர்கள். தொன் மறை, தென் மறை என்னும் மறைகளும் எம்பெருமானை ஏற்றிப் போற்றுவது போல் ஸ்ரீபாஷ்யகாரரையும் இருமறைகளும் போற்றுகின்றன. 'உயர்ந்த குலத்துத் திருவரங்கத்தமுது ஓங்கும் அன்பால் இயம்பிய இராமானுச நூற்றந்தாதி' தென்மறையாகவும், 'ராமானுசமுனி வண்மை போற்றும் சீர்மையன் தூப்புல் கோன் அருளிச் செய்த 'ஸ்ரீ யதிராஜ ஸப்ததி' வட மறையாகவும் விளங்குகின்றன. இவ்விரண்டையும் அபௌருஷேயமான மறைக்கு நிகராகக் கூறுவது முறையாகுமா எனில் இது முறையே என்றருளுவர் நம் ஆன்றோர். மதுர கவிகள்

எம்பெருமானைப் பாடாமல் தம் ஆசார்யரைப் பாடினார். பகவத் பக்தியினும் ஆசார்ய பக்தியை உயர்ந்ததெனக் காட்டிய இவரை ஆழ்வார்கள் கோஷ்டியில் இணைத்ததுடன் இவர் அருளிச் செய்த ப்ரபந்தத்தை முதலாயிரத்தின் முடிவில் ஸ்ரீமந் நாதமுனிகள் சேர்த்தார்ப்போல எம்பெருமானார் விஷயமான இந்த நூற்றந்தாதியை இயற்பா ஆயிரத்தின் முடிவில் எம்பெருமானாரே உகந்து சேர்த்தார். 'முந்தை மறை மொழிய வழி மொழி நீ என்று முகுந்தனருள் தந்த பயன் பெற்ற' இவ்வேதாந்தவாசிரியன் மொழிந்தனவெல்லாம் மறையேயாகும் எனில் இதை மறுத்திடப் போமோ!

**அவதார ரஹஸ்யம்:**

திருவரங்கத்தமுதனார் தாமருளிச் செய்த ஸ்ரீ இராமானுச நூற்றந்தாதியில் "தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து தல முழுதும் கலியே ஆள்கின்ற நாள்" வந்துவிட்டபடியால் அந்நிலையை மாற்றுவதற்காக 'கலியும் கெடும் கண்டு கொண்மின்' என்று தீர்கதரிசியான ஸ்வாமி நம்மாழ்வாரின் வாக்கை மெய்ப்பிக்கும் வண்ணம் வந்தவதரித்தார் என்று ஸ்ரீ இராமானுசரின் அவதார ரஹஸ்யத்தை எடுத்துக் கூறுகிறார். ஸ்வாமி தேசிகனும் தாமருளிச்செய்த ஸ்ரீயதிராஜ ஸப்ததியில் 'சைவ, கபில, மாயாவாத மதங்களின் பிடியில் 'குத்ருஷ்டி குஹநாமுகே நிபதத' என்னும்படி விழுந்து அல்லலுற்ற பரப்ரஹ்மத்தை 'கரக்ரஹ விசக்ஷணர்' என்று போற்றலாம்படி தம் ஞானக் கைகொண்டு கைதூக்கிவிட அவதரித்தார் என்று போற்றுகிறார்.

**அவதாரம்**

இந்நன்நோக்கத்திற்காக அவதரித்த ஸ்வாமி ராமானுஜரின் அவதாரத்தையும், வடிவழகையும் இவ்விரு நல்லோருமே போற்றுகின்றனர். ஸ்வாமி தேசிகன் 'விஷ்வக்ஸேனரே யதிராஜராக' அவதரித்தார் என்று அருளிச் செய்கிறார். அமுதனார் 'அடையார் கமலத்து' என்னும் பாட்டில் 'எம்பெருமானின் பஞ்சாயுதங்களுமே இப்பூதலத்தைக் காப்பதற்கென்று ராமானுஜ முனியாயின' என்று அருளிச் செய்கிறார். ஸ்வாமி தேசிகன் ' ப்ரதயன் விமதேஷு' எனத் தொடங்கும் ச்லோகத்தில் இதே கருத்தை அருளிச் செய்துள்ளார்.

**"'உபவீதிநம் ஊர்த்வ புண்ட்ரவந்தம் ,**
**த்ரிஜகத் புண்ய பலம் த்ரிதண்ட ஹஸ்தம்**
**சரணாகத ஸார்த்தவாஹமீடே**
**சிகயா சேகரிணம் பதிம் யதீநாம்"**

என்று இவர் திருவுருவத்தை வருணிக்கிறார். மேலும் ஸ்ரீ பாஷ்யகாரரின் திருக்கரங்களையும், ஞான முத்திரையையும் மிக அழகாக வருணித்துள்ளார். உபதேச முத்திரையில் ஸேவை ஸாதிக்கும் ஸ்வாமியின் திருக்கை விரல் நகங்களின் ஒளிக்கற்றை நம் மனத்தின் இருளனைத்தையும் மாற்றி, தூய்மைப் படுத்தியபின், தம் வலத் திருக்கரத் தாமரையாகிய தூரிகையைக் கொண்டு அங்கு தத்வ ஞான மெனும் சித்திரத்தை அழகுறத் தீட்டுகிறார் என்றும் அந்த ஞான முத்திரை வேதாந்தங்களில் மறைந்து நிற்கும் ஸாரார்த்தங்களை நாம் அவசியம் உணரவேண்டுமெனும் கருணையுடன் நமக்கு எடுத்து வைத்துக் காட்சி அளிக்கிறது என்றும் போற்றுகிறார்.

**தங்களை ஆட்கொண்டமை**

திருமங்கை ஆழ்வார் திருவாலியுறைப் பெருமானை 'வந்துனதடியேன் ----- எனத் தொடங்கி 'நான் அவ்வெம்பெருமானை நினையாதிருந்த போதும் அவனே மிக்க

கருணையுடன் தாமாகவே வந்து என் அகம் புகுந்தான், புகுந்த பின்னர்தான் நான் அவனை வணங்கினேன்' என்று அவன் அருளையெண்ணி மனமுருகிப் பாடியதுபோல் அமுதனாரும் 'வல்வினையேன் மனம் நீ புகுந்தாய்' என்றும் " என்னைப் புவியில் ஒரு பொருளாக்கி மருள் சுரந்த முன்னைப் பழவினை வேரறுத்து ஊழி முதல்வனையே பன்னப் பணித்தவிராமானுசன்' என்றும் 'அல்லலுக்கு நேரே உறைவிடமான என்னை உய்வித்தார்' என்றும் பலவாறு அவர் தம்மை ஆட்கொண்டதை நன்றி பொங்கப் பேசுகிறார். ஸ்வாமி தேசிகனோ 'அஞ்ஞானமாகிய காட்டில் விளையாடும் என் மனமாகிய மதம் பிடித்த யானையைக் கட்ட வல்லவை எம்பெருமானாரின் திருவடிகளாகிய விலங்குகளே' என்று ஸ்வாமியின் திருவடிகள் தம்மை முழுவதுமாகத் திருத்தி ஆட்கொண்டது எனக்கூறுகிறார்.

**செய்த பேருபகாரங்கள்**

வேத வேதாந்தங்களுக்குக் கூறப்பட்ட பொருந்தாத, மாறான விளக்கங்களை மறுத்து அவர் தம் ஸ்ரீஸூக்திகளால் காப்பாற்றி வேலியிட்டதை இருவருமே வாயார மனதார போற்றுகின்றனர். ' 'பொய்த்தவம் போற்றும் புலைச் சமயங்கள் நிலத்தவியச் செய்தவர்'

எனவும் , " நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன, நாராணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது" எனவும், " மருள் சுரந்து ஆகமவாதியர் கூறும் அவப் பொருளாம் இருள் சுரந்தெய்த்த உலகிருள் நீங்க" எனப் பலவாறு போற்றுகிறார். ஆரணநூல் வழிச் செவ்வை அழித்திடும் ஐதுகர்க்கோர் வாரணமாய் அவர் மாயக் கதலிகள் மாய்த்த பிரான்." என்று ஸ்ரீ ராமானுஜரைப் போற்றும் ஸ்வாமி தேசிகன் இக்கருத்தை ஸ்ரீ யதிராஜ ஸப்ததியில் மிக அழகாகவும், நயமாகவும், உபமானங்களுடனும் வலியுறுத்திக் கூறுகிறார். 'உபநிஷத்துக்களுக்கு ஏற்பட்ட தவறான ப்ரசாரத்தை ஒழிப்பதற்கு ஸ்ரீ ராமானுஜர் செய்த அரும் பணிகள் 'விளையாடும் சிறுவர்களின் கையில் அகப்பட்ட ஒரு கிளி அவர்கள் செய்யும் பல்வேறு குறும்புகளுக்கு ஆளாகி துன்புறும் சமயம் ஒரு பெரியவர் வந்து அக்கிளியை அவர்களிடமிருந்து மீட்டு பத்திரமாக ஒரு கூண்டிற்குள் வைத்துக் காப்பதற்கு ஒப்பானதென்கிறார். வேதமென்னும் அரசியின் கூந்தலே உபநிஷத் பாகமாகும். இவ்வுபநிஷத்திற்குப் பிற மதத்தினரால் கூறப்பட்ட மாறான விளக்கங்கள் அக்கூந்தலில் ஏற்பட்ட சிக்கலாகும். ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகள் அவ்வரசிக்குப் பணிப் பெண்களாயிருந்து கலைந்திருந்த அவள் கூந்தலை ஒன்று கூட்டி வாரி முடிந்து நேர்த்தியாக்குகின்றன என்று மிக அழகாக விளக்கியுள்ளார். ஸ்ரீராமானுஜரின் ஸ்ரீஸுக்திகளைக் கற்றவர்களும், அவரது அடியார்களும் கூட அந்த நூல்களின் பெருமையினால் பிற மதத்தினரை வெல்லக்கூடிய சக்தியினைப் பெறுகின்றனர் என்கிறார்.

***யாம் பெற்ற இன்பம்***

ஸமுதாயத்திற்கு ஸ்வாமி ஆற்றிய அரும்பணிகளைத் தவிர தங்கள் விஷயத்தில் விசேஷமாக அவர் அனுக்ரஹம் செய்துள்ளதாக இருவரும் அகமகிழ்ந்து நன்றியுடன் உரைக்கின்றார்கள். கடுஞ்சொல் கூறல், பிறரைப் பழித்தல் போன்றவற்றால் தூய்மையற்றிருந்த தம் சொற்களாகிய தண்ணீர் ஸ்ரீபாஷ்யகாரரின் புகழைப் பேசுவதால் தேத்தாங்கொட்டை இடப்பட்ட நீர் போல் தெளிந்து தூய்மையாகிவிட்டது

என்கிறார் ஸ்வாமி தேசிகன். இங்ஙனம் வாக்குத் தூய்மை பெற்றதுடன் அவருடைய படைப்புகளினால் வேதங்களைக் காண்பதற்குரிய கண்களையும் பெற்றதாகக் கூறுகிறார். தாம் பிற சமயவாதிகளை வாதில் வென்று வாகை சூடவும், சகல சாஸ்த்ரங்களையும் கற்கவும் அவையே உதவின என்றும் நன்றியுடன் தெரிவிக்கிறார். அமுதனார் தம் அந்தாதியில்

அடிதோறும் ராமானுஜர் தமக்கு விசேஷமாக அருள் செய்ததைக் கூறிக் கூறி மகிழ்கிறார். சிந்தை முதலான தம் இந்த்ரியங்கள் யாவும் சிதைந்து தாழ்ந்தது கண்டு அவற்றைத் தமக்குத் தந்த திருவரங்கனும் கூடத் தன் சரண் அடியேனுக்குத் தரவில்லை ஆனால் எந்தை ராமானுஜனோ தம் திவ்ய சரணங்களைத் தந்து என்னை உயர்ந்து நிற்கும்படி செய்தார் என்கிறார். 'தன்னைப் புவியில் ஒரு பொருளாக்கி , முன்னைப் பழவினை வேரறுத்துத் தம்மைத் திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கியவர் இவரே என்கிறார்.

**ப்ரார்த்தனை**

ராமானுசரின் சரணாரவிந்தமொன்றையே நாம் மன்னி வாழ அவர் திருநாமங்களைச் சொல்லுவாய் என்று நெஞ்சிற்கிடும் கட்டளையுடன் தம் நூற்றந்தாதியைத் தொடங்கும் அமுதனார் தம் ஸ்வாமியின் திருவடி நிலைகளை மட்டுமே ப்ரார்த்திக்கிறார். 'மற்றொன்றும் வேண்டா மனமே' என்றாற்போல் இவரது திருவடி ஒன்றையே வேண்டி நிற்கிறார். கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித் தரிலும்', 'தேவுமற்றறியேன்' என்றிருப்பதே இவர் மனம் மிகவுகக்கும் நிலையாகும். இம்மண்ணில் வாழ்ந்தாலும் வைகுண்டம் புகுந்திடும் போதும் இந்நிலை மாறாதிருக்கப் பிரார்த்திக்கிறார். ஸ்ரீராமானுஜருக்கு மட்டுமின்றி அவர் தொண்டர்கட்கும் தன்னை அடிமையாக்கும்படி அவரை வேண்டியவராய் மதுரகவிகள் போல் சேஷத்வத்தின் எல்லை நிலத்தில் நிற்பவராய் தம் ப்ரபந்தத்தை நிறைவு செய்கிறார்.

ஸ்வாமி தேசிகனும் தம் ஆசார்யராகிய யதிராஜரிடம் தாம் கொண்டிருந்த அளவற்ற பக்தியின் அவருடைய திருவடிகளையே தமக்கு உய்வதற்கு உபாயமாகவும் அனுபவிக்கும் பலனாகவும் கொண்டிருந்தார். எனவே 'சரணம் யதீந்த்ர சரணம் வ்ருணீமஹே' என்று 'அவற்றைச் சரணமாக வரிப்பதாகக்கூறி அத்திருவடிகள் தன்னை ஆட்கொள்ளவேண்டும் என்று அத்திருவடிகளையே' ப்ரார்த்திக்கிறார். மனவிருள் அனைத்தையும் மாற்றி எழில் ஞான விளக்கேற்றி ஒளி தர வல்ல அவருடைய ஸ்ரீபாஷ்யம் முதலான ஸ்ரீஸூக்திகளனைத்தும் ' முக்தி நிச்ரேணிகா' என்னும்படி மோக்ஷத்திற்கு ஏணியாகவும் விளங்குகின்றன. எனவே அந்நூல்கள் நமக்கு 'ப்ரசாதம் ப்ரஸ்நுவீத' என்று (அந்நூல்களில் கூறப்படும் பொருள் நமக்கு நன்கு புலப்படுமாறு] அருளவேண்டுமென்று அந்நூல்களையே ப்ரார்த்திக்கிறார்.

வேதநூல் பிராயம் நூறு என்ற ஆழ்வாரின் திருவாக்குக்கிணங்க நூறாண்டுகளுக்கும் மேலாக நிறை வாழ்வு வாழ்ந்தவர் ஸ்வாமி தேசிகன். இவர் தம் வாழ்நாளின் எல்லையை நெருங்கும் நிலையை உணர்ந்து அருளிச் செய்த ஒரு ச்லோகத்தில் கூறும் சொற்கள் ஸ்ரீராமானுஜர்பால் கொண்டிருந்த பக்தியை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டுவதை நாம் உணரலாம். “நிர்விஷ்டம் யதிஸார்வபௌம வசஸாம்” எனத் தொடங்கும் ச்லோகத்தில் தம் இளமைக்காலம் முழுவதும் யதிராஜரின் ஸ்ரீஸூக்திகளை அனுபவித்ததிலேயே மிகு ஆனந்தமாக கழிந்தது என்கிறார். இவ்விதம் இளமைக் காலம் தொடங்கி இறுதி நாள் வரை இவ்வாசார்யரின் படைப்புகளே தம்மை ஜ்ஞான ஆனந்தமயனாக வாழச்செய்தன என்று அருளிச் செய்துள்ளது எத்துணை ஏற்றமுடையது!

'காரேய் கருணை ராமானுசனெனவும்' 'குணம் திகழ் கொண்டல்' எனவும் பலவாறு போற்றப் பெறும் இந்த ராமானுஜனின் அவதாரமும் கருணா காகுத்தனாகிய ராமபிரானின் அவதாரம் போல் 'கருணையின் காரியமே.' இத்தகு கருணாமூர்த்தியை மனத்தாலும் வாயாலும் வண்மையுடன் போற்றும் திருவரங்கத்தமுதனாரும் வேதாந்தகுருவும் இருவருமே ராமானுஜ தயாபாத்ரம் எனப்படுபவர்களே! திவ்யத் தலங்களில் உறையும் எம்பெருமான்களைச் சென்று நாம் ஸேவிக்கையில் அவன் பெருமைகள் அனைத்தையும் உள்ளபடி நாம் உணர்வதில்லை. அவற்றைத் தம் திவ்யப் படைப்புகளென்னும் தீப ஒளியின்

துணைகொண்டு ஆழ்வார்களும் ஆசார்யர்களும் நமக்குக் காட்டி விளக்கியருளும் போதே அவ்வடிவழகையும் அவன் பெருமைகளையும் நன்குணர்ந்து இன்புறவியலும். அதுபோல் இவ்விரு ஆசார்யர்கள் அருளிய இவ்விரு தீபங்களின் துணைகொண்டு பகவத் ராமானுஜர்பால் 'சென்றதாம் என் சிந்தனையே' என்னும்படி அவர் பெருமைகளை மனதில் நிறைத்து, மகிழ்ந்து, இன்னருளை வேண்டி அவர் திருவடிகளில் பணிந்து நாமும் ராமானுஜ தயைக்குப் பாத்திரர்களாவோம்.

ஸ்ரீராமானுஜர் திருவடிகளே சரணம்




# ராமானுஜரின் குரு

திருக்கச்சி நம்பிகள் பூவிருந்தவல்லியில் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் கஜேந்திரதாசர் என்பதாகும். இவர் வைணவர்களில் முக்கியமான ராமானுஜரின் குரு என்று குறிப்பிடப்படுகிறார். திருமாலுக்கு திருஆலவட்டம் வீசும் கைங்கர்யம் செய்பவராகவும், பெருமானிடம் பேசும் திறன் கொண்டவராகவும் திருக்கச்சி நம்பிகளை வைணவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

ஸ்ரீ:

# உலகெல்லாம் துதிக்கும் கருணைக் கடல்

அனுராதா சேஷாத்ரி,பெங்களூரு

ப்ரதமாசார்யனான எம்பெருமான் தொடக்கமாக அவிச்சின்னமாக விளங்கி வரும் ஆசார்ய பரம்பரையின் அனுக்ரஹத்தைப் பற்றி,

**"விகாஹே தீர்த்த பஹுளாம் சீதளாம் குரு ஸந்ததிம்**
**ஸ்ரீநிவாஸ தயாம்போதி பரீவாஹ பரம்பராம்"**

என்பதாக ஆசார்ய பரம்பரை ஸ்ரீநிவாஸனின் தயா ஸமுத்ரத்திலிருந்து தோன்றியவர்கள் என்று ஸ்வாமி தேசிகன் குரு பரம்பரையின் ப்ரபாவத்தை இவ்விதம் அற்புதமாக தயாசதகத்தில் அருளிச்செய்துள்ளார். ஆசார்யர்களே ஸம்ஸார தாபத்தினால் தபிக்கும் நமக்கு குளிர்ச்சியையும் சுகத்தையும் கொடுக்க வல்லவர்கள் என்று காட்டித் தருகின்றார். திவ்ய தம்பதிகளிடம் தயையை தாம் பெற்று ஆசார்யர்கள் அதை நம் மீது பெருகும்படி செய்பவர்கள். இத்தகு பெருமை வாய்ந்த குரு பரம்பரையில், **யதிராஜேந நிபத்த நாயக ஸ்ரீ:** என்னும்படியாக நாயக மணியாக விளங்குபவர் நம்மிராமானுசன்.

ஸ்வாமி இராமானுஜரின் அவதார பெருமை அளப்பரியது. எம்பெருமானின் பெருமையை அளவிட்டுச் சொல்ல முடியாமல் 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்று வேதமே பின் வாங்கியது. அது போலே எம்பெருமானாரின் பெருமையும் அளவிட்டுக் கூறத்தான் இயலுமோ? **பொலிக பொலிக** போயிற்று வல்லுயிர்ச் சாபம்...என்பதாக அனைவரையும் சரணாகதி மார்கத்திலிழியச் செய்து கலியைக் கெடுத்து ரக்ஷணம் செய்வார் என்று இவரின் அவதார மஹிமையை ஸ்வாமி நம்மாழ்வார் ஸூசிப்பித்ததாக பெரியோர் கூறுவர். ஸ்வாமி தேசிகன், பகவத் இராமானுஜரின் அவதாரத்தை **"த்ரிஜகத் புண்ய பலம்"** என்று சாதித்துள்ளார்.

**மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து..**என்கிற அமுதனார் வாக்குப்படி ஸர்வஜ்ஞனான எம்பெருமானால் இவ்வுலகில் உள்ளோரை நல் வழிபடுத்த இயலாததால், எம்பெருமான் பரம க்ருபையுடன் பரமபதத்தில் நித்யசூரிகளின் தலைவரான ஆதிசேஷனை நியமிக்க அவர் இப்பூவுலகில் ராமானுஜராக அவதரித்தார் என்பர் பூர்வர்கள்.

**"அனந்த: ப்ரதமம் ரூபம் த்விதீயம் லக்ஷ்மணஸ்ததா**
**பலபத்ர: த்ருதீயஸ்து கலௌ கச்சித் பவிஷ்யதி||"**

என்கிற புராண வசனம் ப்ரசித்தம். க்ருதயுகத்தில் ஆதிசேஷனாகவும், த்ரேதாயுகத்தில் லக்ஷ்மணனாகவும், த்வாபரயுகத்தில் பலராமனாகவும், இந்த கலியுகத்தில் இராமானுஜனாகவும் அவதரித்தார் என்பதன் மூலம் அவருடைய திவ்யாம்சத்தை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. **சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்...**என்கிறபடி எம்பெருமானார் ஆதிசேஷன் அவதாரம் என்று போற்றுவதற்கேற்ப, ஸர்வ தேச,ஸர்வ கால, ஸர்வாவஸ்தோசித, ஸர்வ வித கைங்கர்யத்திலும் உகப்போடு தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். கண்ணனுக்கே ஆமது காமம் என்பதோடு ஞானம், பக்தி, பாகவத நெறி ஆகிய மூன்றின் துணையோடு ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை ரக்ஷிக்க வந்த ஸ்வாமி இராமானுஜர் தீர்த்த கைங்கர்யம், திவ்யதேச கைங்கர்யம் முதல் ஸ்ரீ பாஷ்யம் அருளிச் செய்தது வரை பல கைங்கர்யங்களில் திளைத்தவர்.

**காரேய் கருணை இராமானுச! இக்கடலிடத்தில் ஆரே அறிபவர் நின் அருளின் தன்மை** என்று அமுதனார் ஸ்வாமி இராமனுஜரின் பெருமையை பரக்கப்

பேசுகின்றார். ஸ்வாமி தேசிகன் யதிராஜ ஸப்ததியில் ஒரு ச்லோகத்தில் எம்பெருமானாரின் கருணையை புனித கங்கைக்கு ஒப்பிடுகின்றார்.

“ஸவித்ரீமுக்தானாம் ஸ்கல ஜகதேந: ப்ரஶமநீ
கரீயோபிஸ்தீர்த்தைருபசித ரஸா யாமுந முகை:|
நிருச்சேதா நிம்நேதரமபி ஸமாப்லாவயதி மாம்
யத்ருச்சா விக்ஷேபாத் யதிபதி தயா திவ்ய தடிநீ||”

யதிராஜருக்கு சேதனர்களிடம் உள்ள கருணை கங்கா நதி போல் வெள்ளமிட்டு ஓடுகின்றது என்று அருளிச் செய்கிறார். கங்கையில் புனித நீராடுவது ஒருவரின் பாவங்களைப் போக்கி அவரைத் தூய்மையாக்குவது போல் யதிராஜரின் கருணை ப்ரவாஹம் ஒருவரின் பாவங்கள் அனைத்தையும் தொலைத்து மோக்ஷம் என்னும் பேரின்பத்தை அளிக்க வல்லது என்று அதை ஆசார்யனின் கருணையே எம்பெருமானின் அருளை நமக்குப் பெற்றுத் தரும் என்று அற்புதமாக விளக்குகின்றார்.

எம்பெருமானாரின் க்ருபா ப்ரவாஹம் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளது. நமக்குப் பல உன்னதமான செல்வங்களைப் பெற்றுத் தந்துள்ளது, அவற்றுள் ஒரு சில முத்துக்களை இங்கு அனுபவிப்போம்!

**இராமானுஜ தர்சனம்:**

வேதங்களே அனைத்துக்கும் மூல ப்ரமாணம். கலியில் வேதத்திற்கு புறம்பான கொள்கைகள் மூலம் உலகை அஜ்ஞான இருளில் மூழ்கடித்தனர் சிலர். அவற்றுக்கு பிற மதத்தினர் கூறிய விபரீத அர்த்தங்களைக் கண்டித்து உண்மை பொருளை விளக்கி, விசிஷ்டாத்வைத வேதாந்தத்தை ஸ்வாமி இராமானுஜர் ஸ்தாபித்தார். இன்றளவும் இது **எம்பெருமானார் தர்சனம்** என்றே வழங்கப் படுகின்றது. பகவத் இராமானுஜர் இம்மண்ணில் உதித்த பின் இருள் நீங்கியது. நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன. நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது. தமிழ் வேதம் வாழ்ச்சி பெற்றது. வண்மையாலும் தன் மாதகவாலும் (கருணையாலும்) உண்மை நல் ஞானம் உரைத்த இராமானுசன் இத்தாரணியோர்கட்கு தானே சரணாக நின்றான். இவ்விதம் ஶ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு ஞான தீபமாக திகழ்பவர் நம்மிராமானுசன்.

**நவ ரத்னங்கள்**:

பல ஏற்றங்கள் ஶ்ரீ பாஷ்யகாரருக்கு இருப்பினும் அவரது க்ரந்தங்களால் ஏற்பட்ட வைபவம் அளத்தற்கரியது என்று ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ளார். அவர் அருளிச் செய்த க்ரந்தங்கள் ஒன்பது.

1.ஶ்ரீ பாஷ்யம். 2.கீதா பாஷ்யம். 3. வேதார்த்த ஸங்கரஹம். 4.வேதாந்த தீபம்.5. வேதாந்த ஸாரம். 6.சரணாகதி கத்யம் 7.ஶ்ரீ ரங்க கத்யம். 8. ஶ்ரீ வைகுண்ட கத்யம். 9. நித்யம்.

கலியுகத்தில் உண்டியே உடையே என்று அல்லல்படுமவர்களிடம் மிக்க கருணை கொண்டு அவர்கள் தத்துவ, ஹித, புருஷார்த்தத்தை நன்கு அறிந்து கொண்டு உய்வடைய நவ நிதிகள் போன்று ஒன்பது க்ரந்தங்களை அனுக்ரஹித்துள்ளார். அவர் இயற்றிய க்ரந்தங்கள் ஶ்ரீ வைஷ்ணவ கோட்பாடுகளை நன்கு விளக்குவதாக அமைந்துள்ளது. அவருடைய திவ்ய ஸூக்திகள் வேத வேதாந்தங்களை முற்றும் தழுவி தத்துவ, ஹித, புருஷார்த்தங்களை தெளிவித்து அனைவரையும் நல் வழிபடுத்தியது.

**ஆசார்ய பரம்பரை**: எம்பெருமானார் தம் க்ரந்தங்களில் அருளிச் செய்த இன்னுரைகளை அனைவருக்கும் எடுத்துச் சொல்வதற்காகவும் ஶ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் புகழ் திக்கெட்டும் பரவுவதற்காகவும் அற்புதமான குரு பரம்பரையை அமைத்துக் கொடுத்தார். கருணையே வடிவான ஶ்ரீ பாஷ்யகாரர் என்னும் நீர்

நிலையிலிருந்து 74 மதகுகள் மூலம் ஸம்ப்ரதாய நீர் நிலையில் பாய்ந்தது, பகவத் இராமானுஜருடைய ஶ்ரீ பாதத்தை ஆச்ரயித்தவர்கள் பலர் இருந்தனர், அவற்றுள் 74 ஸிம்ஹாஸநாதிபதிகளை, பஞ்ச ஸம்ஸ்காராதிகளை நடத்திக் கொண்டும் ,ஶ்ரீ பாஷ்ய பகவத் விஷய க்ரந்த காலக்ஷேபாதிகள் மூலமும் விசிஷ்டாத்வைத மத வளர்ச்சியை செய்யுமாறு நியமித்தருளினார். இவ்விதம் ஶ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் தழைக்கச் செய்வதற்கு மஹோபகாரம் செய்தவர் பெரும்பூதூர் வந்த வள்ளல்.

**சரணாகதி மார்கம்**: நம் அண்ணல் இராமானுசன், விசிஷ்டாத்வைத வேதாந்தத்தின் சிகரமாக விளங்கக் கூடிய சரணாகதி என்கிற உயர்ந்த தத்துவத்தை உலகோர் அறியும் வண்ணம், பங்குனி உத்திர நன்னாளில், ஶ்ரீ ரங்கத்தில் தாயாரை முன்னிட்டுக் கொண்டு பெருமானும் பிராட்டியுமான சேர்த்தியிலே "**த்வத் பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே"** என்று ப்ரபத்தி அனுஷ்டித்துக் காட்டினார். மாமலராள் நாயகன் ஆன அரங்கனே எல்லா உயிர்கட்கும் நாதன் என்றும், அந்தணர், அந்தியர் என்று அனைவரும் ப்ரபத்தியை அநுஷ்டித்து உய்வடையலாம் என்றும் பரம க்ருபையுடன் காட்டித் தந்தவர் நம் இராமனுச முனி.

**சிஷ்யர்களிடம் கருணை**: திருக்கோஷ்டியூர் நம்பிகள் ஶ்ரீ ராமானுஜரை நன்கு பரீக்ஷை செய்த பின்னரே ரஹஸ்யார்த்தங்களை அவருக்கு அருளிச் செய்தார். இது போன்று ஆசார்யர்கள் தம்மை ஆச்ரயிக்கும் சிஷ்யர்களை நன்றாக பரீக்ஷித்த பின்னரே மந்த்ரோபதேசம் முதலியவைகளை சிக்ஷிக்க ஏற்றுக் கொள்வார்கள். யதிராஜரோவெனில் தம்முடைய அபாரமான கருணையால் மிகக் கடுமையாக பரீக்ஷை செய்யாமல், ப்ரீதியுடன் அவர்களை சிஷ்யர்களாக ஏற்றுக் கொண்டு நல் உபதேசங்களால் திருத்தி பணி கொண்டார். "யோ நித்யமச்யுத பதாம்புஜ யுக்மருக்ம வ்யா மோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே அஸ்மத்குரோர் பகவதோஸ்ய **தயைகஸிந்தோ'**...என்று போற்றுகிறார் **கூரத்தாழ்வான்**. அநுகூலர், ப்ரதிகூலர், உதாசீனர்கள் என்று வாசியில்லாமல் அனைவருக்கும் சரம ச்லோகத்தின் அர்த்தத்தை திருகோஷ்ட்டியூரில் உபதேசித்தார் என்று குரு பரம்பரா ஸாரத்தில் பூர்வர்கள் வ்யாக்னாம் உள்ளதாக பெரியோர் கூறுவர். இவ்விதம் பரந்த குணசீலரான பகவத் இராமானுஜர் தம்மை ஆச்ரயித்தவர்களை அனுக்ரஹித்ததால் இவரை 'வள்ளல் யதிராஜன்' என்று ஸ்வாமி தேசிகன் போற்றிப் புகழ்கிறார்**."ஶ்ரீ ராமானுஜார்யதிவ்யாஜ்ஞா வர்ததாம் அபிவர்த்ததாம்"** என்கிறபடி ஶ்ரீ ராமானுஜர் தமது இறுதிக் காலத்தில் தம் சிஷ்யர்களுக்கு சில கட்டளைகளை அறிவுறுத்தினார். இன்றளவும் ஆசார்யர்கள் எம்பெருமானர் திருவுள்ளம் உகக்க இக்கட்டளைகளை சிரமேற் கொண்டு நம்மையும் அவற்றை பின்பற்றி நடக்கச் செய்கின்றனர். பரம பாகவதனாய் வாழ்வதற்கு இராமனுஜரின் திவ்யாஜ்ஞைகளே அனைவருக்கும் வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. எம்பெருமானாரின் கருணையே கட்டளையாக நம்மை வழி நடத்தி நம்மை எம்பெருமானின் க்ருபைக்கு ஆளாக்கிவிடும் என்பது திண்ணம்.

கருணைக் கடலாம் யதிகட்கிறைவன் இராமானுஜன் அளித்த தீர்த்தத்தை பானம் செய்த கரிகிரி மேல் நிற்கும் அக்கார்மேகம் எதிர்பார்ததற்கும் மேலாக பலன்களை வர்ஷிக்கின்றது என்று ஸ்வாமி தேசிகன் யதிராஜரின் கருணையின் ப்ரபாவத்தையும், பழுதில்லா கைங்கர்யத்தின் மேன்மையையும் யதிராஜ ஸப்ததியில் ஒரு அழகான ச்லோகத்தில் அனுபவிக்கின்றார்!.

இத்தனிப் பெருங்கருணை குணக்குலமோங்குமிராமானுசனின் அவதார வைபவத்திற்கு ஓர் மணி மகுடம் போன்று ப்ரகாசிக்கின்றது. இக் கருணை என்கிற குணமே இவரை ஶ்ரீ வைஷ்ணவ ஆசார்ய பரம்பரை எனும் ஹாரத்தின் நடு நாயகமணியாக ஒளிரச் செய்கின்றது!! ........... ஶ்ரீமதே இராமானுஜாய நம:...........

# ஸ்வாமி ராமானுஜர் கொடுத்த சீட்டு

ராஜலக்ஷ்மி ஸ்ரீனிவாசகோபாலன்



**அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை உறை மார்பா**
**நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய் என்னை ஆள்வானே**
**நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே**
**புகல் ஒன்றில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே**
**---நம்மாழ்வார் (திருவாய்மொழி)**

எல்லோர்க்கும் அறிந்த நம்மாழ்வாரின் சரணாகதி பாசுரம் மேல்கண்டவை.

ஸ்வாமி ராமானுஜர் வாழக்கையில் ஒரு நிகழ்வு இந்த பாசுரத்தின் படி அமைந்துள்ளது. அந்த பாசுரத்தின் மகத்துவத்தை நாம் புரிந்து கொள்ளலாம்.

ஸ்வாமி ராமானுஜர் ஒரு முறை திருமலையில் எழுந்தருளியுள்ளார். அப்போது "**தும்பயர் கொண்டி**" என்ற ஒரு பால்காரி தினமும் ஸ்வாமி மடத்திற்கு பால் மற்றும் தயிர் கொடுப்பாள். ஸ்வாமி ராமானுஜர் அவைகளை தன் ஆராதனைக்காக உபயோகிப்பர். பல மாதங்கள் பிறகு ஸ்வாமி ராமானுஜர் திருமலையிலிருந்து புறப்பட்டார். அப்போது இந்த பால்காரி, பால் தயிர்க்கான பணத்தை வசூலிப்பதற்காக ஒரு சீட்டு கொண்டு வந்தாள். ஸ்வாமி ராமானுஜர் தன் சிஷ்யரான கிடாம்பி ஆச்சானை பணம் கொடுக்கும்படி கூறினார். அதுமட்டுமில்லாமல் பிரசாதத்தையும் கொடுக்கும்படி கூறினார். அவள்

ஸ்வாமி பிரசாதத்தை ஏற்றுக்கொண்டு ஸ்வாமியை வேண்டினாள். ஸ்வாமி ராமானுஜர் அவளை ஆசிர்வாதம் செய்து என்ன வேண்டும் என்று கேட்டார். அவள், தனக்கு பால் தயிருக்கான பணம் வேண்டாம் அதற்கு பதிலாக மோக்ஷம் வேண்டும் என்றும் கூறினாள். அவளுடைய பக்தியை கண்டு ஸ்வாமி மனம் மகிழ்ந்தார்.

ஸ்வாமி ராமானுஜர் "தாயே! மோக்ஷம் கொடுக்கும் தகுதி எனக்கு இல்லை. இந்த திருமலையில் இருக்கும் அகிலாண்டகோடி ப்ரஹ்மாண்ட நாயகனாக விளங்கும் அந்த அலர்மேல்மங்கை சமேத ஸ்ரீநிவாஸ பெருமாள் தான் கொடுக்க முடியும். தாம் அவரிடம் சென்று வேண்டுங்கள்" என்று கூறினார்.

பால்காரி உடனே ஒரு சீட்டு எடுத்து ஸ்வாமி ராமாநுஜரிடத்தில் கொடுத்தாள். "ஸ்வாமி, தாம் இந்த சீட்டில் எனக்கு பால் தயிர் பணத்திற்கு பதிலாக மோக்ஷம் கொடுக்கவேண்டும் என்று தாம் ஸ்ரீனிவாச பெருமாளுக்கு எழுதுங்கள் என்று கூறினாள்.

ஸ்வாமி ராமானுஜர் அவளுடைய பக்தி ஞானம் மற்றும் வைராக்கியத்தை கண்டு வியந்து அவ்வாறே சீட்டு எழுதி கொடுத்தார்.

பால்காரி, மிகவும் ஆனந்தப்பட்டு ஸ்வாமி ராமானுஜரை வணங்கி திருமலை கோவிலுக்கு சென்றாள். திருவேங்கடமுடையனை மனமார கண்டு இந்த சீட்டை கொடுத்தார். திருமலையப்பன் அதை கண்டு "உமக்கு இந்த சீட்டின்படி நாம் மோக்ஷம் கொடுப்போம்" என்று ஸ்ரீனிவாச பெருமாள் கூறினார்.

பால்காரி மிக மிக ஆனந்தம் அடைந்து பெருமாளை ஸேவித்துவிட்டு வந்தார். வந்தவுடன் அவள் ஆச்சார்யன் திருவடி அடைந்தாள்.

இந்த நிகழ்வு நமக்கு ஒரு உண்மையை உணர்த்துகிறது. என்னவென்றால், ஒருவன் ஆசார்ய சம்மந்தம் பெற்றுவிட்டால் பகவான் நமக்கு மிக எளிதாக மோக்ஷம் கொடுப்பர் என்பது திண்ணம்.

**ஸ்வாமி ராமானுஜர் திருவடிகளே தஞ்ஜம்!**

## இராமானுசரின் மூன்று திருமேனிகள்




***வைணவப் புரட்சித் துறவி இராமானுசரின் மூன்று திருமேனிகள் புகழ் பெற்றவை ஆகும். அவை:***

1. ***தமர் உகந்த திருமேனி (மேல்கோட்டை என்ற திருநாராயணபுரம், மைசூர்)***
2. ***தானுகந்த திருமேனி (ஸ்ரீபெரும்புதூர்)***
3. ***தானான திருமேனி (ஸ்ரீரங்கம்)***

# உடையவரின் உயர்ந்த அச்சம்

**கண்ணன் ரங்காசாரி , மேடவாக்கம் சென்னை**



எதனைக் கண்டும், எவரைக் கண்டும் ராமானுஜர் அஞ்சவில்லை.

தன்னால், இன்னொருவருக்குக் கொடுத்த வாக்கினை இது வரை நிறைவேற்ற முடியாமல் போனதே, என்று அவரை, மறுமுறை காணும் சமயத்தில், மனது நாணி அஞ்சினார்.

வங்கிப் புரத்து நம்பி என்னும் உடையவரின் பரம ஆஸ்ரிதர் (பக்தர்) இருந்தார். இவர், ராமாநுஜரிடம், எம்பெருமானுக்கு நீராடல் ஆராதனை செய்யும் கிரம முறைகளை உபதேசிக்க வேண்டியிருந்தார்.

பல அலுவல்கள் இடையில் உடையவருக்கு, வங்கிப் புரத்து நம்பிக்கு கொடுத்த வாக்கினை நிறைவேற்ற அவகாசம் இல்லை.

இதன் இடையில், கூரத்தாழ்வாருக்கும், அனுமந்த தாசர் என்ற தன்னுடைய சீடருக்கும், திருவாராதன (நீராடல்) க்ரமத்தைப் பயற்சிவிக்கும் சந்தர்ப்பம் உடையவருக்கு உண்டானது.

அந்த சமயத்தில், ராமாநுஜரைக் காண வந்த வங்கிப் புரத்து நம்பியைக் கண்டு, தம்மிடம் ஏற்கனவே, பல கால் கேட்டும், இவருக்கு திருவாராதன முறைகளைப் பயிற்சிவிக்கத் தவறிய குற்ற உணர்வு, ராமானுஜர் மனதில் தாங்க ஓணாத அச்சத்தை ஏற்படுத்தியது.

அது மட்டும் அன்றி, கூரத்தாழ்வாருக்கும், அனுமந்த தாஸருக்கும் பயிற்சிக்கும் போதில், வங்கி புரத்து நம்பியையும் அழைக்காமல் விட்டது, ராமானுஜருக்கு மன உறுத்தல் தந்தது.

வங்கி புரத்து நம்பியை நோக்கி ராமானுஜர் அழகிய வார்த்தை சொன்னார்.

'ஒளியா வெண்ணை உண்டா னென்று, உரலோடு ஆய்ச்சி ஒண் கயிற்றால் விளியா வார்க்க வாப்புண்டு விம்மி அழுதான்' - வெண்ணையை களவு கொண்டு, ஒளித்து இருந்து உண்டதைக் கண்டு பிடித்து யசோதை, கண்ணனை, உரலோடு வலிய கயிற்றினால் கட்டியதற்காக, விம்மியழுதான்.

'எழில் கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு எள்கு நிலையம் ............அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும்' தாம்புக் கயிற்றால் கட்டியதற்காக வருந்தி அஞ்சிக் கண்ணன் அழுதான், என்ற அருளிச் செயல்களின் வரிகளில், இது வரை இருந்த சந்தேகமான, நியமங்களுக்கும், தருமங்களுக்கும் அதிகாரியான பிரான், தன்னுடய தாயாரின் இந்தக் கயிற்றால் கட்டிய சிறிய செய்கைக்காக, அஞ்சி அழுதிருப்பான் என்பது எப்படிச் சாத்தியம், என்ற கேள்விக்கு, கண்ணன் தாம்புக் கயிற்றின் இருக்கத்தினாலோ, அதனால் ஏற்பட்ட வலிக்காகவோ அஞ்சி அழ வில்லை.

வங்கிப் புரத்து நம்பிக்குத் தான் கொடுத்த சொல்லை நிறைவேற்ற முடியாமல் போனதே இதுவரையில்,என்ற உணர்வினால் தான் நாணி அஞ்சியதைப் போன்றே,

நியமன தாரியான கண்ணனுக்கு, தன்னுடைய குறும்பின் பாதிப்பினால் யசோதை எவ்வளவு வருந்தியிருப்பாள் என்ற எண்ணம் திடீரென மேல் எழுந்ததாலேயே, அஞ்சி அழுதிருப்பான் என்ற விளக்கம் வங்கிப் புரத்து நம்பியின் சம்பவத்தின் வாயிலாக வைணவ க்ரமங்களின் மஹா நியமன தாரியான ராமானுஜருக்கு வெளிப்பட்டது.

கரு: அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமிகள்



# எம்பெருமானாரின் ப்ரபாவ வைபவம்

**கல்யாணபுரம் தேவஸ்தானம் ஸாமம் பார்த்தஸாரதி**

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய கவிதார்க்கிக கேஸரீ |
வேதாந்தாசார்ய வர்யோமே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ||

***அகில புவ ஜன்ம ஸ்தேம பங்காதி லீலே***
***விநத விவித பூத வ்ராத ரக்ஷைக தீக்ஷே |***
***ச்ருதி சிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீனிவாஸே***
***பவது மம பரஸ்மின் ஶேமுஷி பக்தி ரூபா ||***

*(ஸ்ரீபாஷ்யம் மங்கள ச்லோகம்)*

*விசேஷணங்களுடன் கூடிய வஸ்து விசிஷ்டம் எனப்படும். சித சித் விசிஷ்டமான வஸ்துவாகிய ப்ரஹ்மம் ஒன்றுதான் (எக்காலத்திலும் இருக்கும்) தத்வம் என்பது இந்த சித்தாந்தத்தின் கொள்கையாதலால் இந்த* ***விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்*** *எனக் கூறுகிறோம். பக்தர், முக்தர், நித்யர் என்கிற மூன்று வகைப்பட்ட சேதனங்களையும், ப்ருக்ருதி, காலம், சுத்த ஸத்வம் என்கிற மூன்றுவிதமான அசேதனங்களையும் தனக்கு சரீரமாக உடைய ச்ரியப்பதியான நாராயணனே பரதத்வம் என்பது ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் ஸ்வாமி தேசிகன்.*

***அசெஷ சித சித் ப்ரகாரம் ப்ரஹ்மைக மேவ தத்வம்-***
***தத்ர ப்ரகாரிணோ: ப்ரகாரணாம்ச மிதோத்யந்த***
***வேதேபி விசிஷ்டைக்யாதி விவக்ஷயைகத்வ வ்யதேச:***
***தகிதர நிஷேதச்ச அத: ஸித்த மசேஷ சித சித் ப்ரகாரம்***
***ப்ரஹ்மைக: ஸ்ரீமந்நாராயண இதி |***

*என்கிறார்.*

*இந்த ஸித்தாந்தத்தின் கொள்கைகளை – ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் பஹுமுகமாக ப்ரவர்த்தனம் செய்தும் இந்த மதத்திற்கு புறம்பான மதஸ்தர்களை நிரஸனம் செய்தும் உபகாரம் செய்ததை எம்பெருமானாராகையினால் இதை இராமானுஜ ஸித்தாந்தம் என்று சொல்கிறது.*

*இராமானுஜரை இளையாழ்வார் என்று பெரிய திருமலை நம்பிகளாலும், யதிராஜர் என்று காஞ்சி பேரருளாளனாலும், எம்பெருமானார் என்று திருக்கோட்டியூர் நம்பிகளாலும், திருப்பாவை ஜீயர் என்று பெரிய நம்பிகளாலும், உடையவர் என்று பெரிய பெருமாளாலும், ஸ்ரீபாஷ்யகாரர் என்று கலைமகளாலும், கோயில் அண்ணன் என்று கோதை நாச்சியாராலும் கொண்டாடப்பட்டவர்.*

*இராமானுஜர் வாழ்ந்த காலம் 120 ஆண்டுகள். இளையாழ்வாருக்கு பெரிய நம்பிகளால் த்வயம் விளைந்த திருப்பதியில் மகிழ மரத்தடியில் (மதுராந்தகம்) பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து இராமானுஜன் என்று திருநாமமிட்டார். இராமானுஜர் கி.பி. 1017 பிங்கள வருடம் சித்திரை திங்கள் திருவாதிரை நக்ஷத்திரத்தில் அவதரித்தார்.*

*இராமானுஜர் அருளிய ஒன்பது க்ரந்தங்களில் நூல்களில் முதன்மையானது ஸ்ரீபாஷ்யம். வேத வ்யாஸரின் ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு விளக்கவுரையாகும். வேத வ்யாஸரால் இயற்றப்பட்டவை ப்ரஹ்ம ஸூத்ரங்கள் ஜைமினி முனிவரால் அருளப்பட்டவை. ப்ரஹ்ம*

*ஸூத்ரங்கள் 545 ஆகும். 4 அத்யாயங்களாயும், ஒவ்வொரு அத்யாயமும் 4 பாதங்களைக் கொண்டது. ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு போதாயனர் 60000 படிகள் என்ற கணக்கிலே விஸ்தாரமான விருத்தி என்ற விளக்க நூலை அருளியுள்ளார். வேதாந்த தீபம் என்பது ப்ரஹ்ம ஸூத்ர சிற்றுரைக்கு விளக்க உரையாகும். கீதாபாஷ்யம் பகவத் கீதைக்கு உரையாகும். வேதாந்த ஸாரம் ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு சிற்றுரையாகும். வேதார்த்த ஸங்க்ரஹம் விசிஷ்டாத்வைத கொள்கை விளக்கமாகும். மூன்று கத்யங்கள் உரைநடையில் முக்தி தருபவை. நித்யம் நாள் வழிப்பாட்டு குறைகளை விளக்குவது. திருக்கோஷ்டியூர் நம்பி ரஹஸ்யார்த்தங்களை உடையவருக்கு சிக்ஷித்து அருளினார். திருமலை ஆண்டான் திருவாய்மொழி பொருள் உபதேசித்தார். திருமலை நம்பி ஸ்ரீமத் ராமாயணம் ஸாதித்து அருளினார். திருவரங்க பெருமாள் அரையர் திவ்ய ப்ரபரபந்த ஆழ்பொருள் அளித்து ஆசார்யர்கள் ஆனார்கள்.*

*இராமானுஜரின் பெருமையை*

**மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து * எங்கள் மாதவனே**
**கண்ணுற நிற்கிலும் காணகில்லா * உலகோர்கள் எல்லாம்**
**அண்ணல் இராமானுசன் வந்து தோன்றிய அப்பொழுதே ***
**நண்ணரு ஞானம் தலைக்கொண்டு * நாரணற்காயினரே**

*என்று திருவரங்கத்தமுதனார் இராமானுஜ நூற்றந்தாதியில் புகழ்கிறார்.*

**ப்ரணாமம் லக்ஷ்மணமுநிம் ப்ரதிக்ருஹ்ணாது மாமகம் |**
**ப்ரஸாதயதி யத்ஸூக்தி : ஸ்வாதீநபதிகாம் ச்ருதிம் ||**

*(யதிராஜ ஸப்ததி – 10)*

*மஹாராஜாவினுடைய ப்ரிய நாயகி எனப்பெறும் ஸ்வாதீன பதிகா போல எம்பெருமானுக்கு ச்ருதி, உபநிஷத் நாயகி. இந்த நாயகிக்கு அத்யந்த க்ஷேசைரந்த்ரி எனப்படுவாள். சைரந்த்ரி போன்ற திவ்ய ஸூக்திகளை அருளிய ஸ்ரீராமானுஜரின் அருங்கருணைக்கு இராமானுஜரை வணங்குவதைத் தவிர வேறு என்ன கைம்மாறு செய்ய முடியும் என்று ஸ்வாமி தேசிகன் புகழ்கிறார்.*

*ஸ்ரீஇராமானுஜர் அருளிய கத்யத்ரயத்தில் ஒன்றான ஸ்ரீரங்க கத்யத்தில் ஸ்ரீரங்கநாதனே பரதத்துவம் அவன் திருவடிகளில் சரணாகதியே உபாயம். அவன் திருவடிகளில் கைங்கர்யமே புருஷார்த்தம் என்று அறுதியிட்டு அது தமக்கு கிடைக்க வேண்டும் என்று ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளில் சரணாகதி பண்ணுகிறார்.*

*மேலும் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய ஆலயத்தில் திருவாராதனம், உத்ஸவங்கள் எல்லாவற்றையும் சாஸ்திரப்படி நடத்த ஏற்பாடு செய்தும், அதை தாம் முன்னின்று நடத்தியும் போந்தார் என்று குருபரம்பரா ப்ரபாவம் போன்ற நூல்களிலிருந்து தெரிகிறது.*

*ப்ரபந்நர்களுக்கு நியமித்த ஸ்ரீபாஷ்யகாரர் இட்ட 6 கட்டளைகளைப் பூர்த்தி செய்தவர் ஸ்வாமி தேசிகன்.*


1. *ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்*
2. *அதற்கு யோக்யதை இல்லையாகில் அருளிச் செயலைக் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல்*
3. *அதற்கும் யோக்யதை இல்லையாகில் த்வயத்தினுடைய அர்த்தானு ஸந்தானம் பண்ணுதல்.*
4. *அதற்கும் யோக்யதை இல்லையாகில் உகந்தருளின திவ்யதேசங்களுக்கு அமுதுபடி சாத்துப்படி திருவிளக்கு திருமாலைகளைச் சமர்ப்பித்தல்.*
5. *அதற்கும் யோக்யதை இல்லையாகில் என்னுடையவனென்று அபிமானித்திருப்பானொரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அபிமானத்திலே ஒதுங்கி இருத்தல்.*

திருமால் நெறியை வளர்க்க 74 சிம்மாஸனாதிபதிகளை நியமித்தார். திவ்ய ப்ரபந்தங்களை வளர்த்து நாடெங்கும் பரவச் செய்தார். விசிஷ்டாத்வைதத்தின் பொருளை நிலைநாட்டினார். வைணவ கோயில்களில், திவ்யதேசங்களில் ஆழ்வார், ஆசார்யர்கள் நித்ய மாஸ வருஷ உத்ஸவங்கள் நடைபெறும் நிலைக்கு வைணவ செல்வத்தை வளர்த்தார்.

ஒப்பற்ற வைணவ பெருந்தகையாகவும் சமயப் பேரறிஞராகவும் தத்துவ பெட்டகமாகவும், ஈடு இணையற்ற சமுதாய சீர்திருத்த வாதியாகவும் திகழ்ந்தார்.

பெரும்புதூர் மாமுனியின் சிந்தனைகளை சிந்தித்தாலே பிறவிக்கு பெருமை சேர்க்கும்.

கவிதார்க்கிக சிம்ஹாய கல்யாண குணசாலிநே |
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம: ||



# காரேய் கருணை ராமானுச

Dr .ஸ்ரீனிவாசராகவன், கல்லூரி முதல்வர், ஸ்ரீரங்கம்

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன் பரித்ராணாய ஸாதூனாம் என்கிற கீதாசார்யன் திருவாக்கின்படி அர்ச்சாவதாரங்களில் இவ்வுலகை ரக்ஷித்தது போல தானே ஆசார்யனாய் அவதரித்து இவ்வுலகைக் காப்பாற்றி அருள்கிறான்.
ஸ்ரீமந் நாதமுனி முதலாக யாமுனமுனி நடுவாக ஸ்ரீராமானுஜமுனி ஈறாக உள்ள நமது ஸத்ஸம்ப்ரதாய முனித்ரய ஸம்ப்ரதாயம் தோன்ற காரணம் ராமானுஜனே.
ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே என்கிறபடி ஆசார்ய லக்ஷணம் பரிபூர்ணமாய் அவதரித்த மஹான்.
கலக்கமில்லா நல்தவ முனிவர்களைக் கண்டோர் என்கிறபடி ஸம்ஸாரத்தை அடைந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்களான ஜீவர்களை திருத்திப் பணிகொள்ளவல்ல ஆசார்யன்.

காரேய் கருணையிராமானுச என்பர் அமுதனார். மேகத்தை ஒத்த கருணையுள்ள மஹான்.

மேகமானது கடல்நீரை முகந்து வர்ஷிக்குமாப்போல் "ச்ருதிஸாகராத்" த்ராவிட வேத சாகரம் என்றபடி இவ்வாசார்யன் உபயவேதங்களில் உள்ள ரஸங்களை வர்ஷித்தார்.
மேகமானது உயரளிப்பான் மாகஸ்களெல்லாம் திரித்து என்கிறபடியே ராமானுஜர் சிஷ்யர்கள் உள்ள இடமெல்லாம் சென்று வர்ஷித்தார். (உபதேசித்தார்)
மேகமானது பள்ளமான இடங்களில் பெய்கிற படியே ராமானுஜரும் நீசர்கள் இடத்திலும் உபதேசிப்பார்.
மேகமானது மும்மாரி பெய்கிறபடியே ராமானுஜரும் தத்வஹித புருஷார்த்தங்கள் பரபக்தி, பரக்ஞான, பரமபத்தி என்ற மும்மாரி தத்வங்களை பொழிகிறார்.
மேகமானது கைம்மாறு கருதாது வர்ஷிப்பதுபோல இவரும் சிஷ்யர்களிடத்தில் பிரதிபலன் பாராது உபதேசம் செய்வார்.
மேகமானது சில இடங்களில் பெய்கிற நீரானது முத்தாவதுபோல இராமானுஜரால் சில சிஷ்யர்களில் உபதேசிப்பது அர்த்தவிசேஷங்கள் முத்து போல் பிரகாசிக்கிறது.
ஹம்ஸோ யதா க்ஷீரமிவ அம்புரமிச்ரம் என்கிறபடி இவ்வாசார்யன் ராமானுஜன் சாஸ்த்ரங்கள் ஸாராஸாரங்களைப் பிரித்து உபதேசித்தார்.
சங்கமவை முரலச்செங்கமல மலரையேறி அன்னமலி பெடையோடுமரும் என்றபடி ஹம்ஸமானது சங்குகளில் முழக்கத்தை இனிமையாக கேக்குமாப்போல இராமானுஜரும் சிஷ்யர்கள் செய்யும் ஸ்துதிகளைக் கேட்டு எழுந்தருளியிருந்தார்.
ப்ரஹ்ம ஞானம் மிகச் சிறந்தது மற்ற அஜ்ஞானங்களைப் போக்கவல்லது.
ஸ்வாத்யாய ப்ரவசனே ஏவேதி நாகோ மௌத்கல்ய: என்கிறபடி ப்ரஹ்மஞானம் ஏற்படக் காரணமாய் உள்ள ஸ்ரீபாஷ்யத்தைக் கொடுத்த மஹான்.

இராமானுஜர் ஒருவரே ஆசார்ய பதத்திற்கு பரிபூர்த்தி ஆனவர். குணப் பெருமை ஸத்ஸம்ப்ரதாய ஸம்வஸித ஸதாசார ஸம்பத்தி ஞானவைராக்ய பூர்த்தி, அனைத்தும் உடையவர். ஆகவே இவர் உடையவர்.

வணக்கமொடுக்கம். வழக்கமொழுக்கம் முதலான ரத்னங்கள் இவ்வாசார்யன் இராமானுஜர் இடத்தில் இருக்கின்றன.

போந்ததென் நெஞ்சென்னும் பொன்வண்டு உனதடிப்போதில்
நின்பாலதுவே ஈந்திட வேண்டும் இராமானுஜ இதுவன்றி ஒன்றும்
மாந்தகில்லாது இனி மற்றொன்று காட்டி மயக்கிடலே என்கிறபடி ராமானுஜர் நம்மை என்றும் நல்வழிப்படுத்தட்டும்.





ஸ்ரீமதே ஸ்ரீ வராஹ மஹாதேசிகாய நம:

# எழில்மிகு எதிராஜர்

புவனகிரி மாதவன் , கல்லூரி துணை முதல்வர் ஸ்ரீரங்கம்

உலகில் உள்ள ஜீவராசிகள் நல்ல கதியை அடைய வேண்டும் என்ற ஆசையினால் பகவான் பல அவதாரங்களை எடுத்தார். எடுத்தும் முழுமையான த்ருப்தி அடையவில்லை பகவானால். பிறகு ஒரு முடிவு செய்து இனி நாம் ஆசார்ய அவதாரம் எடுத்து இந்த ஜீவராசிகளை கரை சேர்க்க எண்ணங்கொண்டு ஆசார்ய அவதாரம் எடுத்தார். முதலில் பகவான் எடுத்தது கீதாசார்யன் அவதாரம். அதிலிருந்து பெருமாளுக்கு நல்ல த்ருப்தி ஏற்பட்டது. பிறகு ராமானுஜர் என்ற திருநாமத்தில் மறைத்து வைத்து இந்த பூலோகத்திற்கு வந்து அவதாரம் செய்தார். யதிராஜர் என்றால் ஆசார்யார்க்குள் தலைசிறந்தவர். யதிராட் மற்றும் எந்த ஆசார்யர்க்கும் இல்லாத தனித்தன்மை நம் யதிராஜர்க்கு உண்டு. 120 சாதுர்மாஸ்யத்தை தாண்டியதால் நம் ஆசார்யர்க்கு இந்த திருநாமம் பொருந்தியது என்ற விவரங்களை ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் சாதித்தாயிற்று. ஆசார்யர்க்கு ஒரு நெல் கூட வீணாகக்கூடாது என்ற ஆசை. ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாயத்தின் ஏற்றம். இராமானுஜர் இல்லை என்றால் இன்று நம் விசிஷ்டாத்வைத மதமே அடியோடு போயிருக்கும். அதனை பாதுகாத்த பெருமை யதிராஜருக்கு மட்டுமே பொருந்தும்.

யதிராஜர் அடிக்கடி காலக்ஷேபத்தில் சாதிப்பாராம். நம்முடைய வைதீக மதம் எந்த காலத்திலும், யாராலும் அழிக்க முடியாத பலம் பொருந்திய ஒன்று என்று. ஒரு சமயம் காலக்ஷேப கோஷ்டி நடக்கும் சமயத்தில் பரதத்வம், ப்ரகரணம் வந்தது. எப்பொழுதும் ஆசார்யர் வீதியில் உஞ்சவ்ருத்தி எடுத்தார்களேயானால் அவர்களுக்கு அமுது சமர்ப்பித்து பிறகு காலக்ஷேபத்தை தொடங்குவது வழக்கம். சாதுர் சாத்திர பண்டிதர் ஒருவர் தன்னுடைய சிஷ்யன் ஒருவனை அனுப்பி பரதத்வம் யார்? என்ற கேள்விக்கு விடை தேடச் சொன்னார். சிஷ்யர்கள் அதனை தலை மேல் தரித்து, பண்டிதரை அணுகி பரதத்வம் யார் என்று கேள்வியை வினவினார்கள். அதற்கு அந்த பண்டிதர் தன்னுடைய சாஸ்த்ர அனுபவத்தின் பேரில், “சிவ இதி” என்று சைவர்கள் கூறுகிறார்கள். “யக்ஞம் இதி” என்று யாக்ஞிகர்கள் கூறுகிறார்கள். “விஷ்ணு இதி” என்று வைஷ்ணவர்கள் கூறுகிறார்கள் என்று தெளிவாக சாஸ்த்ர விதிப்படி சொன்னார். இதனைக் கொண்டு போய் யதிராஜர் இடத்தில் தெரிவித்தார்கள். மறுநாள் அதே காலக்ஷேப கோஷ்டி நடந்த சமயத்தில் மீண்டும் சிஷ்யர்களை அனுப்பி பரதேவதை யார் என்று கேட்கச் சொன்னார். சிஷ்யர்களும் வீதியில் போய் பார்த்தார்கள். அங்கு ஒரு பாகவதர் வருவதைக் கண்டு யதிராஜரிடம் கூறினார்கள். அதனால் என்ன அவரிடம் போய்க் கேளுங்கள் என்றார். சிஷ்யர்கள் பாகவதரை அணுகி ஸ்வாமி பரதேவதை யார் என்று கேட்டு அமுதை

*சேர்க்கின்ற சமயத்தில் அந்த பரமபாகவதர் நிறுத்துங்கள் பரதேவதை ஸ்ரீயபதியான நாராயணன் ஒருவனே என்று தெளிவாக எடுத்துரைத்தார். பிறகு சிஷ்யர்களுக்கு ஒரு நம்பிக்கையை எடுத்துக் கூறினார். இப்படி சிஷ்யர்களுக்கு ப்ரமாணங்களைக் கொண்டு தெளிவான சம்ப்ரதாயத்தை வளர்த்த நம் யதிராஜன் எப்பொழுதும் நம்முடனே இருக்கிறார்.*

*மண்ணுலகில் எல்லோருக்கும் சமத்துவத்தை தெரிவித்தார். பல திவ்யக்ஷேத்திரங்களை நடைமுறைப்படுத்தினார். உபநிஷத் வார்த்தைகளை சரியாக கையாண்டார். எதிரிகள் இடத்திலும் அன்பு செலுத்த வேண்டும் என்றார்.*

*எம்பெருமான்தான் உயர்ந்த தத்துவம், தர்மத்தை நேசிக்க வேண்டும். நம்முடைய பூர்வாச்சார்யர்களின் உபதேசங்களை பின் சந்ததியினருக்கு தெளிவுபடக் கூற வேண்டும்.*

*இந்த உலகமே எம்பெருமானின் திருமேனி என்ற எண்ணம் இருந்தால்தான் எல்லா ஜீவராசிகளிடத்தும் எம்பெருமான் உள்ளான் என்ற தத்துவத்தை சிதசித் விசிஷ்டனான எம்பெருமான் என்று கத்யத்ரயத்தில் தெளிவுபடக் கூறினார்.*

*பல மதத்தவரை மதிக்க வேண்டும் என்றார். பல நல்ல லோகபகாரியத்தைச் சரிசெய்த பெருமை நம் யதிராஜனுக்கு மட்டுமே பொருந்தும். பின்வந்த தற்பொழுது உள்ள ஸ்ரீவைஷ்ணவ ஆச்சாரியார்கள் இராமானுஜர் அடியைப் போற்றி அவரின் உபதேசங்களை இந்த தேசங்கள் முழுவதும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.*

*ஸ்ரீமதே ராமானுஜ மஹாதேசிகாய நம:*



# வைஷ்ணவர்களுக்கு ராமானுஜருடைய 72 கட்டளைகள்

(01). ஆசார்யரின் திருவடி பணிந்து போவது போல் அனைத்து வைஷ்ணவர்களிடமும் நடக்க வேண்டும்.

(02); சம்பிரதாய குருக்கள் வார்த்தையில் நம்பிக்கை வேணும்.

(03) புலன்கள் இழுத்த வழி செல்லாமல் இருக்க வேண்டும்.

(04) மதசார்பற்ற ஞானம் அறிவுடன் போதும் என்று இல்லாமல் இருக்கவேண்டும்.

(05) பகவத் சரித்திரங்கள், ,சேஷ்டிதங்கள், வாகயங்களில் உகந்த ஈடுபாடுடன் இருக்க வேண்டும்.

(06) ஆச்சார்ய உயர்ந்த ப்ரஹ்மஞானம் அருளிய பின்பு மீண்டும் புலன்கள் கவர்ச்சியில் ஈடுபடாமல் இருக்க வேண்டும்.

(07) அனைத்து இந்திரிய வியாபாரங்களிலும் ஒதுங்கி இருக்க வேண்டும்.

(08): சந்தனம், மலர், நறுமணம் இவற்றில் அதிக ஈடுபாடு கொண்டு இருக்கக் கூடாது,

(09) கைங்கர்யபரர் திருநாமங்களை உபயோகிக்கும் பொழுது எம்பெருமானின் திருநாமங்களை உபயோகிக்கும் பொழுது அடையும் இன்பம் அடைய வேண்டும்.

(10) அடியார் அடியானே, அவளை அவன் அடியானை விட சீக்கிரம் அடைகிறான் என்பதில் உறுதி கொள்ள வேண்டும்.

(11): ஞானவான் அவன் கைங்கர்யமோ அவன் அடியார் கைங்கர்யமோ இன்றி அழியான்.

(12) வைஷ்ணவர் வாழ்வு முறை அவனை அடையும் உபாயம் என்று கருதக்கூடாது.

(13) அவன் ஒருவனே அடையும் குறிக்கோள்.

(14) கைங்கர்ய பரர்களை மரியாதையின்றி நடத்தக்கூடாது.

(15) ஸ்ரீவைஷ்ணவ அதைப் பார்த்ததும் முதலில் அடி பணியாமல் இருக்கக்கூடாது.

(16) பகவத் சந்நிதியிலோ அவன் அடியார்கள் இருந்தாலும், ஆன்மீக கூட்டத்திலோ காலை நீட்டி இருக்கக்கூடாது.

(17) திருக்கோவிலை நோக்கியோ, ஆச்சார்யர்கள் திருமாளிகை நோக்கியோ, கைங்கர்யபரர் திருமாளிகை நோக்கியோ கால் நீட்டக் கூடாது.

(18):காலையில் எழுந்ததும் குரு பரம்பரை அனுஸந்திக்க .

(19) பகவான் எழுந்தருளும்போது முன்வரும் திவ்ய பிரபந்த கோஷ்டியைப் பார்த்ததும் த்வயம் மஹாமந்திரம் அனுஸந்தித்துக்கொண்டு சேவிக்கவும்.

(20) திருநாமசங்கீர்த்தனத்தின் நடுவிலோ,கைங்கர்யபரர்களை பாராட்டும்போழுதோ, நன்றாக அடிபணிந்து வணங்க வேண்டும். ரகுவின் கூட்டத்தில் இருந்து போவது மிகப்பெரிய பாவமாகும்.

(21) உன்னைத்தேடி வைஷ்ணவன் வருகிறான் என்று தெரிந்தால் முன்னமே சென்று வரவேற்க வேண்டும். அவர்கள் விடை கொள்ளும்பொழுது,, நடு வழிவரை கூட செல்ல வேண்டும். இதை செய்யாவிடில் மிகப் பெரிய பாவமாகும்.

(22) அடியவர் அடியானாக இருக்க ஆசை கொள்ள வேண்டும்.

அவர்கள் திருமாளிகை சென்று கைங்கரியம் செய்து, அவர்களை மரியாதையாக நடத்த வேண்டும்.

(23) திருக்கோவிலையோ, திரு கோபுரத்தையோ, திரு விமானத்தையோ கண்டால் கை கூப்பி வணங்க வேண்டும்.

(24) மறந்தும் புற தொழாமல் அப்பேர்ப்பட்ட கோயில்களை

நயங்களுடன் இருந்தாலும் காணாமல் இருக்க வேண்டும்.

(25) மற்றை தெய்வ சேஷ்டதங்கள் ஆச்சரியமாக இருந்தாலும் ,ஈர்க்க கூடாதவை

(26) அவனை புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கும் பொழுதோ, அவன் அடியார் கைங்கர்யபரராகளை புகழ்ந்து கொண்டிருக்கும் பொழுதோ, நடுவில் குறுக்கே பேசி தடங்கள் செய்யக்கூடாது.

(27) ஸ்ரீவைஷ்ணவர் நிழலைக் கூட தாண்டக்கூடாது.

(28) நம் நிழலும் அவர்கள் மேல் படாமல் இருக்கும்படி கவனம் வேண்டும்.

(29): நன்றாக நீராடிய பின்பே ஸ்ரீவைஷ்ணவரை தொட்டு பரிமாற்ற வேண்டும்.

(30) ஏழை ஸ்ரீவைஷ்ணவ உன்னை முதலில் வணங்கினால் அவளை அவமரியாதையுடன் நடத்தக்கூடாது. அப்படி நடத்தினால் மிகப்பெரிய பாவம் வரும்.

(31) ஸ்ரீ வைஷ்ணவர் உன்னை முதலில் வணங்கி அடியேன் என்றால், அவருக்கு அவமரியாதை காட்டக் கூடாது. அப்படி செய்தால் மிகப்பெரிய பாவமாகும்.

(32) ஸ்ரீவைஷ்ணவம் பற்றிய குறைகள், சோம்பல்தனம், தூங்கி வழிவது, தாழ்ந்த பிறவி போன்றவை அறிந்தால் அதுபற்றி மற்றவனிடம் பேசாமல் நமக்குள்ளேயே வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களின் நல்ல பண்பை மட்டுமே பேச வேண்டும்.

(33) பெருமாள் தீர்த்தமும், ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாத தீர்த்தமும் சமாஸ்ரயம் ஆகாதவர் முன்னிலையில் ஸ்வீகரித்துக் கொள்ளக்கூடாது.

(34) தத்வ த்ரயம், ரஹஸ்ய த்ரயத்தையும் அறியாத ஸ்ரீவைஷ்ணவர் ஸ்ரீபாத தீர்த்தம் ஸ்வீகரித்துக கொள்ளக்கூடாது.

(35) ஞானம் அனுஷ்டானம் நிறைந்த ஸ்ரீவைஷ்ணவர்த எப்பாடு பட்டாலும் பாத தீர்த்தம் ஸ்வீகரிக்க வேண்டும்.

(36) கைங்கர்ய பரர்கள் உடன் நம்மை வாழ்வே பண்ணிக் கொள்ள வேண்டும்.

(37): அறியாமல் நாத்திகர் மேல் தீண்டப் பெற்றால் நீராடி ஸ்ரீவைஷ்ணவர் ஸ்ரீ பாத தீர்த்தம் சுவீகரித்து சுத்திப் படுத்திக் கொள்ளவேண்டும்

.(38)'பற்றற்ற ஞானவான்களை பகவானை ஒக்க எண்ணி அவர்களுக்கு கைங்கர்யம் செய்ய வேண்டும்.

(39) அப்படிப்பட்டவர்களில் பிறப்பு குலம் போன்றவற்றை மதியாமல் நம்மை உய்யக்கொள்ள வந்தவர்கள் என்று எண்ணி போக வேண்டும்.

(40): நாஸ்திகன் வீட்டில் பெருமாள் தீர்த்தம் ஸ்வீகரிக்கக்கூடாது

(41) அப்படிப்பட்டவன் வீட்டில் பெருமாளை சேவிக்க கூடாது.

(42)'ஆனால் திருக்கோவில்களில் அப்படிப்பட்டவர்கள் இருந்தாலும் பெருமாள் பிரசாதம் ஸ்வீகரிக்காமல் இருக்கக்கூடாது.

(43) விரதம் அனுஷ்டிக்கும் பொழுதும் திருக்கோவில் பிரசாதம் கொடுத்தால் மறுக்கக்கூடாது.

(44) பெருமாள் பிரசாதம் மிகவும் புனிதம்.பாவங்களை போக்கும்.

வேண்டாதவர் கொடுக்கும் பிரசாதம் என்றாலும் மறுக்கக்கூடாது

(45) ஶ்ரீவைஷ்ணவ கூட்டத்தில் தற்புகழ்ச்சிக் கூடாது.

(46) மற்றவரை வெட்கப்படும்படி செய்யக்கூடாது.

(47) அவன் அடியாரை புகழவும் கைங்கர்யம் செய்யவும் எல்லா பொழுதும் போக வேண்டும்.

(48) நிச்சயம் ஒரு மணி நேரமாவது ஆசாரியனின் புகழை பாட வேண்டும்.

(49) திவ்யப் பிரபந்தங்களிலும்  குரு பரம்பரையுயிலும் நித்தியம் பலமணிநேரம் ஈடுபட்டு அனுபவிக்க வேண்டும்.

(50) தன்னைப் பற்றியே எண்ணியிருப்பாரிடம் சேர் வேண்டாம்.

(51) வெளிள் மட்டும் ஶ்ரீவைஷ்ணவ சின்னம் கொண்டு, உள்ளே ,ஶ்ரீவைஷ்ணவ சிந்தனை இல்லாதவருடன் நட்பு கூடாது.

(52): வழி சொல்வார் வதந்தி பரப்புபவர்களுடன் நட்பு கூடாது.

(53) மற்ற சமயத்தாருடன் கலந்த பாவம் போக்க ஶ்ரீவைஷ்ணவர் சேர்க்கை வேண்டும்.

(54) அவன் அடியார்களை கலங்கப்படுத்தும், ஆசார்யர்களை இகழும் புலித்தோல் போர்த்திய மமானிரை மதிக்க கூடாது.

(55) த்வயம் அனுஷ்டான நிட்டர்கள் கூட்டம் நாடி போக ஆசைப்பட வேண்டும்

(56) உபயாந்தரங்களை நாடுவார்களை விட்டு பிரபத்தி நிஷ்டர்கள் சகவாசம் கொள்ள வேண்டும்.

(57): தத்வத்ரயம், ரஹஸ்யஜத்ரையம் அறிந்தாருடன் சேர ஆசை கொள்ள வேண்டும்.

(58): ஐஸ்வர்யார்த்திகள் சேர்க்கை தவிர்த்து பகவன் லாபார்திகள் சேர்க்கைக்கு ஆசைப்பட வேண்டும்.

(59) ஶ்ரீவைஷ்ணவ நம்பக்க?ள் செய்த  குற்றங்களை கசியாமல் அவர்களை பழி வாங்க எண்ணாமல் கட்டுப்பட்டு இருக்கர வேண்டும்.

(60) . பரமபத கைங்கர்யம் ஆசைப்பட்டால் ஶ்ரீவைஷ்ணவ நலத்துக்கு பாடுபட வேண்டும்.

(61) சரணாகதன்  கைங்கர்ய பலர் சித்திக்கு கட்டளைப்படிக்கு மாறாக தனக்கு நன்மையே பயத்தாலும் நடக்கக்கூடாது

(62)'பெருமாள் கண்டு அருளாத பிரசாதமோ, பெருமானுக்கு சாத்தாத சந்தனமோ,' வெத்திரையோ, புஷ்பமோ, பானகமோ ஸ்வீகரித்து கொள்ளக்கூடாது.

(63) ஐஸ்வர்யாதிகள் தானாகவே கொடுப்பவற்றை ஸ்வீகரித்துக் கொள்ளக்கூடாது.

(64) நல்ல அனுஷ்டானம் குலபிறப்பு கொண்டவர் பிரசாதம் மற்றும் ஸ்வீகரிக்கலாம்.

(65): சாஸ்திரம் வித்திட்ட ஒன்றையே பகவானுக்கு சமர்ப்பிக்க வேண்டும். கண்ணுக்கு அழகாக இருப்பவை விதிக்கப்படா விடில் சமர்ப்பிக்க கூடாது.

(66) சாஸ்திரம் பிடித்தபடியே கண்டு அருள பண்ண வேண்டும்.

(67): பெருமாள் பிரசாதம், புஷ்பம், புனிதம் என்ற உணர்வுடன் ஸ்வீகரிக்கவேண்டும். போகப்பொருளாக கொள்ளக்கூடாது.

(68) சாஸ்திரம் விதித்தபடியே அவனுக்கு நாம் செய்யும் கடமை என்று உணர வேண்டும்.

(69) ரஹஸ்யத்ரயநிஸ்டர்களை அவமதித்தால் பேரிழப்பு நிச்சயம். அவர்கள் அனுக்ஹத்தால் பேரு சீக்கிரம் நிச்சயம் பெறுவோம்.

(70) அடியார் அடியார் கைங்கர்யமே நமது குறிக்கோளாக கொள்ள வேண்டும். அவர்கள் மனம் கோணும்படி நடந்தால் பெறும் இழப்பு நேரிடும்.

(71)'திவ்ய திருமேனியை வெறும் கல் என்றோ, ஆசாரியரை வெறும் மனிதர் என்றோ, பாகவதர்கள் பிறப்பை இழிவாக எண்ணுபவனோ, புனித நீரை வெறும் தண்ணீர் என்று நினைப்பவனோ, திருமந்திரங்களை சொல் கூட்டம் என்று நினைப்பவனோ, பரமாத்மாவை தேவர்களில் ஒருவன் என்று எண்ணுபவனோ அதை பாதாள இருட்டு நரகம் புகுவான்.

(72) ஆச்சாரியர் அபிமானம் உத்தாரகம். பெருமாள் திருவடிகளைவிட ஆசாரிய அடிபணிபவனே பேரு பெறுவான்.

ஆசார்யர்ளை மதிக்காதவன் பெருமாளை மதிக்காதவனை விட அதிகம் பாவம் செய்தவன் ஆகிறான். ஆசார்யர் ஸ்ரீபாத தீர்த்தம் அவன் திருவடி தீர்த்தத்தை விட புனிதமானது.



# ராமானுஜர் வரலாறு: குருவை மிஞ்சிய சீடர்



ஸ்ரீ ராமானுஜர் திருஅவதாரம் செய்து வளர்ந்துவருகையில் வேதாந்தம் பயில, காஞ்சிபுரத்தை அடுத்த திருப்புட்குழி என்னும் ஊரிலிருந்த யாதவப் பிரகாசர் என்னும் அத்வைத வேதாந்தியிடம் சென்றார். அவருடன் அவருடைய சிறிய தாயார் மகனான கோவிந்தன் என்பவரும் உடன் பயிலச் சென்றார். அத்வைதம் என்றால் இரண்டற்றது என்று பொருள். அதாவது பிரம்மம் (பரம்பொருள்) ஒன்றே உண்மை; மற்றவை பொய்த் தோற்றம் என்ற கொள்கையுடையது அத்வைதம். வேதத்தில் பரம்பொருள் வேறு, மற்றவையான அறிவுடைய, அறிவற்ற பொருட்கள் வெவ்வேறு எனப் பொருள்படும் வாக்கியங்களும், அப்பரம்பொருள் எல்லாப் பொருட்களையும் தன்னுள் கொண்டுள்ளமையால் பரம்பொருள் ஒன்றே எனப் பொருள்படும் வாக்கியங்களும் உள்ளன. இவற்றைப் பேதச் சுருதி, அபேதச் சுருதி என்றும் கூறுவர். இவ்விரண்டில் பிரிவுபடாத நிலையை அறிவிக்கும் வாக்கியங்களை (அபேத வாக்கியங்கள்) மட்டும் முடிந்த முடிவாகக் கொண்டு அதற்கு ஏற்ப மற்றப் பிரிவு படக் கூறுகிற வாக்கியங்களுக்கும் பொருளைக் கூறுவது அத்வைத மரபு.

இவ்வாறு யாதவப் பிரகாசர் அத்வைதக் கண்ணோட்டத்தில் வேதவாக்கியங்களுக்குப் பொருள் கூறும்போதெல்லாம், இளையாழ்வார் மறுத்துவந்தார்.

**‘தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவ மக்ஷிணீ’** என்ற வேதத்துக்குப் பொருள் கூறினார் ஆசிரியர். இந்தச் சுருதிக்கு, ‘அந்தப் பிரம்மத்துக்குச் சூரியனால் அலர்த்தப்படுகிற தாமரை போன்ற கண்கள்’ என்பது பொருள். இவ்வாறு கூறினால் அப்பிரம்மத்துக்கு உருவம் உண்டென்றும், குணங்கள் உண்டென்றும்

பொருள்படும். ஆனால் அத்வைதக் கொள்கையில் உருவமும் குணமும் இல்லை ஆகையால் பொருளை மாற்றிக் கூற வேண்டியிருந்தது. எனவே ‘பிரம்மத்துக்குக் கண்கள் கப்யாஸம் குரங்கின் பின்புறம் போல் இருக்கிறது என்று வேதம் பரிகாசம் செய்கிறது’ என்று பொருள் கூறினார். இதைக் கேட்ட உடையவர் வேதனை அடைந்து கண்ணீர் விட்டார். அது கண்ட யாதவப் பிரகாசர், ‘ஏன் அழுகிறாய்?’ என்றார். அதற்கு ராமானுஜர், கம் + பிபதி = கபி: கம் நீர்; பிபதி அதைப் பானம் செய்பவன் சூரியன். அச்சூரியனால் அலர்த்தப்படும் தாமரை போன்ற கண்கள் என்று உண்மைப் பொருள் இருக்கப் பிரம்மத்தை இப்படி இழிவுபடுத்தலாமா என வினவினார்.

ராமானுஜரின் அறிவு மேம்பாட்டை உணர்ந்த ஆசிரியர், அவரைக் கொன்றுவிட எண்ணிக் காசி யாத்திரை அழைத்துச் சென்றார். வழியில் கோவிந்தன், தமையனாருக்கு இதைக் குறிப்பாக உணர்த்த உடனே ராமானுஜர் காஞ்சிக்குத் திரும்பி நடக்கலானார். பல மாதம் நடந்த வழி, விந்தியக் காடு, இருள் சூழ, திகைத்திருந்து, ‘ஆவாரார் துணை?’ என்று கலங்கி நின்றபோது, காஞ்சி வரதராஜப் பெருமாளும் பெருந்தேவித் தாயாரும், வேடுவனும் வேடுவச்சியுமாக வந்து காத்து, மறுநாள் விடியலில் காஞ்சிக்கருகில் கொணர்ந்து சேர்த்தனர். தாயார் ‘நீர் வேண்டும்’ என்று கூற, அருகில் உள்ள (சாலைக்) கிணற்றிலிருந்து நீர் கொணர்ந்து தர, உடன் அவர்கள் மறைந்தனர். உடையவர் தம்மைக் காத்தவர் யார்? என்ற உண்மை உணர்ந்து, நாளும் அக்கிணற்றிலிருந்து நீர் கொணர்ந்து திருமஞ்சனம் செய்துவந்தார்.


காசி யாத்திரையின்போது கோவிந்தருக்கு நீரில் ஒரு லிங்கம் கிடைக்க, அவர் அத்வைதியாகிக் காளஹஸ்தி சென்று ஆலயப் பூசைகளைச் செய்துவந்தார். பின்னர் யாதவப் பிரகாசர் காஞ்சி திரும்பி உடையவரைக் கண்டு திடுக்கிட்டு, விவரமறிந்து அவரிடம் மதிப்புடையவராகி, மறுபடியும் தன்னோடு சேர்த்துக் கொண்டு பாடம் நடத்திவந்தார்.

திருவரங்கத்தில் ஆச்சாரியராக இருந்த ஆளவந்தார் என்பவர் விவரம் அறிந்து, காஞ்சி வந்து, கோஷ்டியிலிருந்த இளையாழ்வாரைக் கண்டு, ‘ஆம் முதல்வன் இவன்’ என்று கடாட்சித்தார். பின் பெருமாளிடம் இவரை நம் சமயத்தை வளர்ப்பவராக ஆக்கியருள வேண்டித் திருவரங்கம் சென்றார். அக்காலம் காஞ்சியை ஆண்ட மன்னனின் மகளைப் பிரம்ம ராட்சசம் பீடித்திருந்தது. யாதவர் வந்து ஓட்ட, அது அகலவில்லை, பின் இளையாழ்வார் வந்து ஓட்ட, அது அகன்றது.

யாதவப் பிரகாசர் மறுபடியும் ‘ஸர்வம் கல்விதம் ப்ரம்ம’ என்பன போன்ற சுருதிகளுக்கு அத்வைதக் கருத்துப்படிப் பொருள் கூறினார். இளையாழ்வார் அதை ஏற்காமல், பிரம்மம் வேறு, சித்து அறிவுடைய பொருள்; அசித்து அறிவற்ற பொருள், இவற்றை அது சரீரமாகக் கொண்டுள்ளது. (இது சரீர அசரீர பாவனை

எனப்படும்) என விசிஷ்டாத்வைதக் கருத்துப்படி பொருள் கூறினார். அது கேட்ட யாதவப் பிரகாசர், ‘நீர் இனி இங்கு வரவேண்டாம், உம் அறிவுக்குத் தக்கவரிடம் போம்’ என்று கூறிவிட்டார். இளையாழ்வாரும் விலகி திருக்கச்சி நம்பிகளை அடைந்து, முன்புபோலத் தீர்த்தக் கைங்கர்யம் செய்துவந்தார்.
ராமானுஜர் தம் மனைவியிடம் கண்ட மூன்று குற்றங்களால் அவரை விலக்கித் துறவியானார். கூரத்தாழ்வார், முதலியாண்டான் முதலிய பலரும் சீடராயினர். பேரருளாளன் அருளிய ஆறு வார்த்தைகளின்படி பெரிய நம்பிகளிடம் (மதுராந்தகத்தில்) பஞ்ச சம்ஸ்காரங்களைப் பெற்றார். தம் அம்மான் பெரிய திருமலை நம்பிகளைக் கொண்டு கோவிந்தனைத் திருத்திப் பழையபடியே வைணவராக்கினார்.
இந்நிலையில் யாதவப் பிரகாசர் தம் தாயாரின் அறிவுரையை ஏற்று, ராமானுஜ முனியை அடைந்து, அவரை வலம் வந்து வணங்கிப் பிராயச்சித்தம் செய்து கொண்டு, சீடரானார். உடையவரும் அவரை ஏற்று உரிய சடங்குகளைச் செய்து, முக்கோல், துவராடைகளைத் தந்து உபதேசித்து, கோவிந்த ஜீயர் எனத் திருப்பெயரும் அருளினார். அவரை யதிதர்ம சமுச்சயம் என்னும் நூலை சாஸ்திர விரோதமின்றிச் செய்யும்படி நியமிக்க, அவரும் அவ்வாறே செய்து அளித்தார். பின் குறுகிய கால அளவிலேயே யாதவப் பிரகாசர் பரமபதம் அடைந்தார். இவ்வாறு தம்மைக் கொல்லத் துணிந்தவருக்கும் நன்மை செய்தவர் ராமானுஜராவார்.

**Source:** https://www.hindutamil.in/news/spirituals/83093-.html



## 1005 ஆண்டுகளாக ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் ராமானுஜர்!

- ஸ்ரீபெரும்புதூரில் 1,017 ஆம் ஆண்டில் சித்திரை மாதம், திருவாதிரை நட்சத்திரத்தில் அவதரித்தார் இராமானுஜர்.
- இவர் இந்து மதம் மற்றும் சமூகத்தைச் சீர்திருத்தம் செய்த வைணவ மகான்.
- இவர் ஆழ்வார்களின் பாசுரங்களை பெருமாள் கோவில்களில் இசையுடன் பாடிட வழிவகுத்தவர். இதனால் இவர் தமிழ் வேதமான திருவாய் மொழியின் "செவிலித்தாய்" எனப் போற்றப்படுகிறார்.
- இராமானுஜர் பன்மொழிப் புலமைமிக்கவர். இவர் தமிழ் மறையை தழைக்கச் செய்தவர்.
- ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே ஜனநாயகம், சமத்துவம், சமதர்மம், சாதி மத பேதமின்மை ஆகிய கொள்கைகளை மக்களிடையே உபதேசித்து அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டினார்.
- இவர் ஆன்மிகத்தோடு சமூக ஒற்றுமையையும் வலியுறுத்திய சிறந்தச் சமூக ஆன்மீக சீர்திருத்தவாதி.
- ஆதிதிராவிடர்களைத் "திருக்குலத்தவர்" என்று புகழ்ந்தார் ராமானுஜர்.
- இவரை "உடையவர், ஸ்ரீ பாஷ்யக்காரர், எம்பெருமானார், திருப்பாவை ஜீயர், யதிராஜமுனி, இளையபெருமாள்" எனப் பல பெயர்களால் அழைக்கின்றனர்.
- இவர் ஸ்ரீரங்கம் கோவிலின் நிர்வாகத் திட்டங்களை சீரமைத்து, தொகுத்து வகுத்தார்.
- இந்து தத்துவப் பிரிவுகளில் ஒன்றான விசிஷ்டாத்துவைதத் தத்துவத்தைத் தோற்றுவித்து, அதை இந்தியா முழுவதும் பரப்பினார் இராமானுஜர்.
- ஏழை எளிய மக்களிடமும் வைணவம் பரவக் காரணமாக இருந்தார்; பரிபூரணமான பக்தியும் சரணாகதியுமே இறைவனை அடைவதற்கான எளிய வழி என்று கூறி மக்களை எளிய வழியில் நெறிப்படுத்தினார் இராமானுஜர்.
- தமிழ்நாட்டில் ஸ்ரீபெரும்புதூரில் சோமயாஜி தீட்சிதர் மற்றும் காந்திமதி அம்மாளுக்கு மகனாகப் பிறந்தார் இராமானுஜர். இவர் தனது தந்தையிடம் இருந்து வீட்டிலேயே வேதங்களைக் கற்று வந்தார்.
- சிறு வயதிலேயே வேதங்களிலும், உபநிடதங்களிலும் இருக்கும் மிக நுணுக்கமான தத்துவங்களை எளிதாகப் புரிந்து கொண்டார் இராமானுஜர்.
- இவர் தனது 16வது வயதில் தஞ்சம்மாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். திருமணமான சிலமாதங்களில் தனது தந்தையை இழந்தார் இராமானுஜர்.

- ஸ்ரீ பெரும்புதூரிலிருந்து காஞ்சிபுரத்திற்கு குடி பெயர்ந்தார் இராமானுஜர். இவர் காஞ்சிபுரத்தில் "யாதவ பிரகாசர்" என்கிற பண்டிதரிடம் சீடராகச் சேர்ந்தார். கல்வி, கேள்வி, ஞானங்களில் தேர்ச்சி பெற்றவரான யாதவ பிரகாசர் அளித்தச் சில அத்வைத விளக்கங்களில் இராமானுஜருக்கு உடன்பாடு ஏற்படவில்லை.
- இதனால் இருவருக்கும் அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் கோபம் கொண்டு யாதவ பிரகாசர் இராமானுஜரை கங்கையில் தள்ளி ஜலசமாதி செய்ய எண்ணி காசிக்கு சீடர்களுடன் பயணமானார்.
- காசியை நெருங்கும் போது தனது தம்பி கோவிந்தனின் மூலம் குருவின் திட்டத்தை அறிந்து, காசியிலிருந்து காஞ்சிக்குத் தப்பினார் இராமானுஜர். காசியிலிருந்து காஞ்சிக்கு ஒரே நாள் இரவில் பெருமாளின் கருணையால் தப்பித்ததாகக் கூறப்படுகிறது
- பின்னர் "திருக்கச்சி நம்பி" என்பவரைக் குருவாக ஏற்றார்.

- திருக்கச்சி நம்பி வைசிய குலத்தைச் சார்ந்தவர். அது தனது மனைவிக்குப் பிடிக்கவில்லை என்பதைத் அவளது செயல்களின் மூலம் தெரிந்துக் கொண்டார் இராமானுஜர்.தன் பக்தி மார்க்கத்திற்கும், மனித நேயத்திற்கும் உறுதுணையாக இவள் இருக்க மாட்டாள்! என்று தெரிந்துக் கொண்ட இராமானுஜர் துறவறத்தை மேற்கொண்டார்.

- ✓ ஆசாரிய குரு பரம்பரையில் முதல் ஆச்சாரியர் நாலாயிர திவ்ய பிரபந்தத்தை தொகுத்த நாத முனிகள் ஆவார். அவருக்குப் பின் “யமுனாச்சாரியர்” என்ற “ஆளவந்தார்” ஆச்சாரியர் ஆனார். இவர் நாதமுனிகளின் பேரன் ஆவார். அடுத்து வந்தவர் இராமானுஜர் ஆவார்.
- ✓ ஆளவந்தாரின் அழைப்பை ஏற்று அவரைப் பார்ப்பதற்கு, பெரிய நம்பியுடன் காஞ்சியிலிருந்து புறப்பட்டு காடு, மலை கடந்து ஶ்ரீரங்கத்திற்கு ஓடோடி வந்தார் இராமானுஜர்.
- ✓ ஆனால் யமுனாச்சாரியாரின் உயிர் பிரிந்த உடலையே அவரால் காண முடிந்தது. ஆனால் அவருடலில் மூன்று விரல்கள் மட்டும் மூடியிருந்தன. அதனைப் பார்த்த இராமானுஜர் யமுனாச்சாரியாரை மானசீகக் குருவாக ஏற்றுக்கொண்டு மூன்று இலட்சியங்களை நிறைவேற்றுவதாகக் கூறினார். அவை:

1.வேதாந்த சூத்திரத்திற்கு விசிஷ்டாத்துவைத் தத்துவம் முறையில் விளக்கம் எழுதுவது.
2.பாரசர முனிவரின் விஷ்ணு புராணத்தை உலக்கு எடுத்து கூறுவது.
3.விசிஷ்டாத்வைத்தை உலகிற்கு எடுத்து சொல்லி, அறியாமையால் மூழ்கி கிடக்கும் பக்தர்களுக்கு இறை அருள் கிடைக்கச் செய்வது.

- இவ்வாறு இராமானுஜர் சொன்னதும் மூடியிருந்த யமுனாச்சாரியாரின் விரல்கள் ஒவ்வொன்றாகத் திறந்தன.
- பினனர் பல நாடுகளுக்கும் இராமானுஜர் சென்று தனது விசிஷ்டாத்வைத் தத்துவங்களை எடுத்துரைத்தார்; பண்டிதர்களுடன் வாதம் செய்து வெற்றி பெற்றார். அவரது தத்துவங்களை ஏற்றுக் கொண்ட பல பண்டிதர்கள் அவரின் சீடர்கள் ஆனார்கள்.
- ஆளவந்தாரின் ஐந்து சீடர்களில் ஒருவரான திருக்கோட்டியூர் நம்பி என்பவரிடம் நாராயண மந்திரத்தின் இரகசியத்தை கற்க முயன்றார் இராமானுஜர். பதினேழு முறைகள் முயன்றும் முடியாமல் பதினெட்டாவது முறையாக ஶ்ரீரங்கத்திலிருந்து திருக்கோஷ்டியூருக்குச் சென்று நாராயண மந்திரத்தின் இரகசியத்தைத் தெரிந்துக் கொண்டார்.
- திருக்கோட்டியூர் நம்பி அரங்கனின் கருணையையும் இவரின் கருணை மிஞ்சிவிட்டது எனக்கூறி “எம்பெருமானார்” என்று கூறி இராமானுஜரைக் கட்டி தழுவினார்.
- இராமானுஜர், ஶ்ரீரங்கம் கோயிலின் நிர்வாகத்தை ஏற்று அதை முற்றிலும் சீர்படுத்தி, அன்றாடம் நடக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை உண்டாக்கினார். இதனால் அவருக்கு எதிர்ப்புகள் முளைத்து, அவரைக் கொல்லும் முயற்சிகள் கூட நிகழ்ந்தன என்பர்.
- தற்போது வைணவக் கோவில்களில் நடைபெறும் பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றை வகுத்தவரும் இராமானுஜரே ஆவார். ஶ்ரீரங்க கோயில் நிர்வாகம், வைஷ்ணவ மட நிர்வாகம் இரண்டையும் திறம்பட நடத்தினார் இராமானுஜர்.
- ஶ்ரீரங்கம் கோயிலின் உடைமைகளைச் சிறப்புற மீட்டெடுத்து, நிர்வாகம் செய்ததால் திருவரங்கன் இராமானுசரை “உடையவர்” என அழைத்தாராம்.

- ஸ்ரீரங்கத்திலுள்ள தலைமை மடத்திற்கு மடாதிபதியாக வரவேண்டிய விதி முறைகளையும் நெறிப்படுத்தினார் இராமானுஜர்.
- ஸ்ரீரங்கத்தைவிட்டுச் செல்ல வேண்டிய சூழல் இராமானுஜருக்கு ஏற்பட்டப்போது, ஸ்ரீரங்கத்திலிருந்து, நீலகிரி காடுகளைச் சென்றடைந்தார் இராமானுஜர். அங்கு நல்லான் சக்கரவர்த்தி என்பவன் அங்குள்ள எல்லாத்தரப்பு மக்களுக்கும் வைணவ மதத்தை கற்று தருவதைப் பார்த்து மெய்சிலிர்த்தார் இராமானுஜர்.
- பின்னர் அங்கிருந்து கர்நாடக மாநிலம் செல்லும் வழியில் தொண்டனூர் என்னும் ஊரில் ஏரி ஒன்றை அமைத்தார் இராமானுஜர். பின்னர் அங்கிருந்து மேலக்கோட்டை சென்று பன்னிரெண்டு ஆண்டுகள் தங்கினார்.
- இராமானுஜர் அவ்வூரில் இருந்த அத்வைத்தவாதிகளை வாதில் வென்று வைணவராக்கினார் இராமானுஜர். அவ்வூரில் இருந்த தாழ்ந்த குலத்தைச் சார்ந்தோரைத் “திருக்குலத்தார்” என்று அழைத்து அவர்களுக்கு பூணூல் அணிவித்து வைணவராக்கினார் இராமானுஜர்.
- பின்னர் தனது சக்தி அனைத்தையும் ஸ்ரீபெரும்புதூரில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரகத்தில் புகுத்திவிட்டு, திவ்யமந்திரத்தை உச்சரித்தபடியே வைகுண்டம் சேர்ந்தார் இராமானுஜர். இப்போதும் இராமானுஜரின் திருஉடல் ஸ்ரீரங்கம் கோயிலில் அப்படியே உள்ளது.
- இராம-அனுஜ என்ற வடமொழிச் சொல்லுக்கு இராமரின் தம்பி எனப் பொருளாகும். (அனுஜ=தம்பி). இவரை “இலட்சுமணரின் அவதாரம்” என்கின்றனர் இறை தொண்டையும், மக்கள் தொண்டையும் இரு கண்களெனக் கொண்டு வாழ்ந்த இராமானுஜரைப் போற்றுவோம்.

..........கீதப்பிரியை. உமா ராதாகிருஷ்ணன்.

# ராமானுஜர் இயற்றிய நூல்கள்

வடமொழியில் இராமானுசர் இயற்றிய ஸ்ரீபாஷ்யம் அவருடைய தலைசிறந்த படைப்பு.

வேதாந்தத்தில் விசிஷ்டாத்வைதத் தத்துவத்தை காலத்திற்கும் நிலைநாட்டிய நூல்.

அதைத்தவிர அவர் இயற்றியவை:

- *வேதாந்த ஸங்கிரஹம்::* . இது உபநிடத தத்துவங்களை விவரித்துச் சொல்கிறது.
- *வேதாந்த ஸாரம் :* மற்றும், *வேதாந்த தீபம் :* இவை பிரம்ம சூத்திரத்தைப் பற்றிய சுருக்கமான உரைகள்.
- *கீதா பாஷ்யம்.* இது கீதைக்கு விசிட்டாத்துவைதத்தையொட்டி எழுதப்பட்ட உரை.
- *நித்யக்கிரந்தங்கள்.* அன்றாட வைதீகச்சடங்குகளும், பூசை முறைகளும்.
- *கத்யத்ரயம்.* இவை மூன்று உரைநடை நூல்கள்.
  - *சரணாகதி கத்யம்* பிரபத்தி என்ற சரண்புகுதலைப் பற்றியது.
  - *ஸ்ரீரங்க கத்யம்* ரங்கநாதப் பெருமானை தன்னை தாசனாக்கிக் கொள்ளும்படி வேண்டுவது.
  - *வைகுண்ட கத்யம்* மகாவிட்டுணுவின் இருப்பிடமான வைகுண்டத்தை நேரில் பார்ப்பதுபோல் விவரிப்பது.

இராமானுசர் அவருடைய சொற்பொழிவுகளை தமிழில் செய்தாலும், தமிழில் அவர் எழுதியதாகத் தெரியவில்லை. ஆனால் ஸ்ரீபாஷ்யம் தவிர அவருடைய இதர நூல்களில் ஆழ்வார்களின் பக்திச்சுவை பாதிப்பு நன்றாகவே தெரிகிறது.

# முக்திக்கு வர்ணம் / ஜாதி தடையில்லை

சமய ஞானம், இறைவனை அடைவது என்பவை குறிப்பிட்ட ஜாதிக்கு உரியது எனத் தவறாக புரிந்துகொண்டு, பிராமணர்களினை மதிப்பவர்களும், இவற்றினை ஜாதி / வர்ணம் இவற்றின் மூலம் தங்களுக்கு எட்டாக்கனியாக பிராமணர்கள் செய்துவிட்டதாக எண்ணுவோரின் தவறான புரிதலும் இன்றும் தொடர்கிறது. நமது வேதங்கள் அப்படி சொல்லவில்லை, வேத மதமான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதமும் கூறவில்லை.

இந்த உண்மையை பெரும் அளவில் வெகுஜனங்களிடம் கொண்டு சென்றது ஸ்ரீவைஷ்ணவ பக்தி இலக்கியங்கள். வேதம் சொல்லி ஆழ்வார்கள் வழிவந்த இந்த செய்தியை நடைமுறை படுத்தியதால் தான் நாஸ்திகரும், பிராமண வெறுப்பாளருமான பாரதிதாசன் கூட ஸ்ரீ ராமானுஜரை பாடுகிறார், இதோ ***<u>பாரதிதாசன் ஸ்ரீ ராமானுஜர் பற்றி</u>*** ...

**"முக்தியோ சிலரின் சொத்தென இருக்கையில்**
**இத்தமிழ் நாடுதன் இருந்தவப் பயனாய்**
**இராமா நுசனை ஈன்ற தன்றோ?"**

எனப்பாடுகிறார்.

**ஆம்! ஸ்ரீ ராமானுஜரின் பிறப்பு தமிழ்நாட்டின் தவப்பயன்.**



# துலுக்க நாச்சியார்

திருநாராயணபுரத்தில் உத்ஸவ மூர்த்தி இல்லாது இருந்த காலத்தில், பெருமாள், ஸ்ரீ ராமானுஜர் கனவில் தோன்றி ராமப்ரியர் என்ற பிரசித்தி பெற்ற என்னுடைய உத்ஸவ மூர்த்தி டில்லி ராஜாவின் அரண்மனையில் உள்ளது அங்கு சென்று இங்கு எழுந்தருளப் பண்ணுவாய் என கூற ஸ்ரீ ராமானுஜர் டில்லி சென்றார்.



இளவரசியின் அந்தப்புரத்தில் அவளது காதலுக்கு உரியவராய் ராமப்ரியர் விக்ரஹம் இருப்பதை கண்டு அரசனின் அனுமதியுடன், ராமப்ரியர் மீது ஆராக்காதல் கொண்ட இளவரசியையும் விக்ரஹத்துடன் ஸ்ரீ ராமானுஜர் பல்லக்கில் அழைத்துவந்தார். வரும் வழியில் இஸ்லாமிய இளவரசி ராமப்ரியர் விக்ரஹத்துடன் ஐக்கியமாகிவிட, ராமப்ரியர் விக்ரஹத்தினை பிரதிஷ்டை செய்தபோது இஸ்லாமிய இளவரசியின் பக்திப்பெருக்கை உணர்த்தும் விதமாக திருநாராயணபுரத்தில், ராமப்ரியர் விக்ரஹத்தின் திருவடிகளில் டில்லி ராஜகுமாரியை சாஸ்திர விதிப்படி அர்ச்சை உருவில் ஸ்ரீ ராமானுஜர் பிரதிஷ்டை செய்தார்.

அதைபோன்றே அவளது பக்தியை உலகுக்கு உணர்த்தும் விதத்தில் ஸ்ரீரங்கம் கோயிலிலும் திருநாராயனபுரத்தில் உள்ளதுபோல் ஸ்ரீ துலுக்க நாச்சியார் என்னும் திருநாமத்தில் பக்தியின் சின்னமாக இஸ்லாமிய இளவரசி திருமால் அடியாராக ஓவியமாக இன்றும் சேவை சாதிக்கிறாள். இன்றும் ஸ்ரீரங்கம், திருநாராயணபுரம் என்னும் இரு கோவில்களிலும் ஆராதனைகள் நடைபெற்றுவருகின்றன.

# ஸ்வாமி ராமானுஜரின் திருக்கோஷ்டியூர் விஜயம்

## மூன்று ரஹஸ்யங்கள்

நம் ஸ்ரீ வைஷ்ணவ தத்துவங்களெல்லாமும் மூன்று மந்திரங்களுக்குள்ளே வெகு சுருக்கமாக வைக்கப்பட்டுள்ளன. அம் மூன்று மந்திரங்களாவன

1. **அஷ்டாக்ஷரம் என்னும் திருமந்த்ரம்**
2. **த்வய மஹா மந்த்ரம்**
3. **சரம ஸ்லோகம்** என்பனவாம்.

பிறப்பு, இறப்பு, மறு பிறப்பு என்னும் இச்சூழலிலிருந்து விடுபட்டு பெருமானை அடைய வேண்டும் என்ற ஆசை உள்ளவன், மோக்ஷத்தில் விருப்பமுள்ளவன் முமுக்ஷு எனப்படுவான். இப்படிப்பட்டவன் மேற்சொன்ன மூன்று ரஹஸ்யங்களின் பொருளை அறிவது மிகவும் அவசியமாகும்.

இவற்றின் பொருளை ஸ்வாமி ஆளவந்தாரின் சிஷ்யரான திருக்கோட்டியூர் நம்பிகளிடம் கற்பதற்காக பகவத் ராமானுஜர் ஸ்ரீரங்கத்திலிருந்து திருக்கோட்டியூர் எழுந்தருளினார். ஆனால் திருக்கோட்டியூர் நம்பியோ இவைகளின் பொருளைக் கற்பிக்க எளிதில் இசையவில்லை. ஒவ்வொரு முறை ஸ்வாமி ராமானுஜர் எழுந்தருளும்போதும் 'பிறகு வாரும், பிறகு வாரும்' என்று சொல்லிவிட, ஸ்வாமி ராமானுஜர் பதினெட்டு முறை திருக்கோட்டியூருக்கு எழுந்தருளினார் என்று வரலாறு. இதன் விளக்கம் கீழே.

| | |
|---|---|
| முதல் முறை | அஹங்கார, மமகாரம் அற்று வாரும் - நான் என்கிற அஹங்காரமும், இந்த செல்வம் என்னுடையது என்னும் மமகாரமும் இல்லாமல், எல்லாம் பெருமானுடையதே என்ற எண்ணம் கொண்டு வாரும். |
| இரண்டாம் முறை | தேஹாத்மான அபிமானம் தொலைந்து வாரும் - இவ்வுடலின் மீதுள்ள பற்று கொண்டு வாழும் நிலை நீங்கி, பாப புண்யங்கள், செய் வினையால் மறுபிறப்பு என்ற நம்பிக்கை கொண்டு வாரும் |
| மூன்றாம் முறை | ஆத்ம ஞானம் பெற்று வாரும் - தேஹம் வேறு, ஆத்மா வேறு என்றும், ஆத்மா பெருமானுக்குக் கட்டுப்பட்டது என்றும் உணர்ந்து வாரும் |
| நான்காம் முறை | ஐச்வர்ய போகங்களில் நசை அற்று வாரும் - ஐச்வர்யம் சேர்ப்பதிலும், அதை அனுபவிப்பதிலும் ஆசை துறந்து பஞ்சேந்த்ரியங்களை கட்டுப்படுத்தி வாரும். |
| ஐந்தாம் முறை | அர்த்த, காம, ராக தோஷமற்று வாரும் - இவ்வுலக இன்ப, துன்பங்களைத் துறந்து, ஸ்தித ப்ரக்யனாய் வாரும். |
| ஆறாம் முறை | ஸம்ஸார பீஜம் நசித்து வாரும் - இவ்வுலக வாழ்க்கையில் பற்று இருந்தால் நம் ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் புரிந்து ஏற்றுக்கொள்வது கடினம். ஆகவே ஸம்ஸாரப்பற்று கழிந்து வாரும் |
| ஏழாம் முறை | ஸாத்வீக பரிக்ரஹம் பண்ணி வாரும் - காமம், கோபம், லோபம், இவை அறவே விலக்கி, ஸாத்வீகனாய் வாரும். |
| எட்டாம் முறை | பகவத் விஷயத்தில் ஆசை பிறந்து வாரும் - பெருமானின் திவ்ய ரூப, ஸ்வரூப, குண சேஷ்டிதங்களை அறிய ஆவல் உள்ளவனாய் வாரும் |

| | |
|---|---|
| ஒன்பதாம் முறை | விஷயாந்தரத்தில் ஆசை அற்று வாரும் - பெருமானைப் பணியும் போதும் வேறு பலன்களைக் கோராமல் உன்னையே அருத்தித்து வந்தோம் என்றிருக்கும்படி வாரும். |
| பத்தாம் முறை | பார தந்த்ர்யம் அறிந்து வந்து வாரும் - சேஷ - சேஷி உறவு தெரிந்து வாரும் |
| பதினொன்றாம் முறை | அதிகாரி புருஷனாய் வாரும் - முதலில் கற்கவேண்டிய, ஆன்ஹிகமெல்லாம் கற்று வாரும். |
| பன்னிரண்டாம் முறை | ஸ்ரீ வைஷ்ணவத்வம் கை வந்து வாரும் - நித்ய கர்மானுஷ்டானங்களிலிருந்து வழுவாதவனாய் வாரும். |
| பதிமூன்றாம் முறை | பாகவத பரிக்ரஹம் கூடி வாரும் - எம்பெருமான் அடியார்களை மதித்துத் தொண்டு செய்யும் மனத்தனாய் வாரும். |
| பதிநான்காம் முறை | பகவத பரிக்ரஹம் கூடி வாரும் - பெருமானை எப்போதும் சிந்திப்பவனாய் வாரும். |
| பதினைந்தாம் முறை | அனன்ய சரணத்வம் கை கூடி வாரும் - வாளால் அறுத்திடினும் மருத்துவன் பால் மாறாத காதல் கொண்டவன்போல், பெருமானையல்லது வேறு புகலில்லாதவனாய் வாரும். |
| பதினாறாம் முறை | அனன்ய ப்ரயோஜனத்வம் கை கூடி வாரும் - கைங்கர்ய நிஷ்டனாய், பெருமானுக்குக் கைங்கர்யம் தவிர, பரதாழ்வானைப்போல் வேறொன்றும் வேண்டாதவனாய் வாரும் |


| | |
|---|---|
| பதினேழாம் முறை | ஆசார்ய அபிமானத்தைப் பெற்று வாரும் - ஸமாச்ரயண, பரந்யாஸ ஆசார்யர்கள் இவன் நம்மவன் என்று அபிமானிக்கும் படி வாழ்ந்து வாரும் |
| பதினெட்டாம் முறை | காலக்ஷேபத் துடக்கம் |

இவை பரம பவித்ரரான ஸ்ரீ ராமானுஜரிடமே சொல்லப்பட்டவை என்று எண்ணும்போது, மந்திரங்களின் பொருளை அறிய எண்ணும் நம் போன்ற சாதாரணமானவர்களுக்கு, மோற்சொன்ன நியமங்கள் மிகவும் அவசியம் என்று உணருதல் நலம்.



# குரு பரம்பரை வைபவம் – ஸ்ரீ ராமானுஜர்

## கோமடம் மாதவாச்சாரியார்



'நான் இப்போது நிற்பது கச்சி மாநகரமா! முக்தி பூமியான காஞ்சியா!! அதோ தேவாதிராஜன் வரதராஜன் விமானம் தெரிகிறதே!'' என்று ஸ்ரீ ராமானுஜர் மூர்ச்சை தெளிந்து கண்களில் நீர் வழிய நின்றார். சீதையைக் கண்ட பின்பு பெருமாளை சந்திக்கும் முன்பு மதுவனத்தில் புகுந்த மாருதியைப் போலவும், ராவணவதம் கேட்ட சீதா பிராட்டியார் போலவும் சந்தோஷமானார். என்ன செய்யப் போகிறோம் என்று அறியாதபோது வேடுவ, வேடுவச்சி உருவில் தேவாதிராஜனும், பெருந்தேவி தாயாரும் ஆட்கொண்டதை நினைத்து பலவாறு புலம்பி அழுதார்.

நானும் அவர்களை புரிந்து கொள்ளாமல் இருந்து விட்டேனே! என்னே! என் மடமை! பகவானின் இந்த ஸௌலப்யம் (சுலபமாக தரிசனம் கிடைக்கும் தன்மை) கிருஷ்ணாவதாரம் போல உள்ளதே என்று புலம்பினார். சுவாமி நம்மாழ்வார், கிருஷ்ணன் உரலில் எளிதாகக் கட்டுப்பட்ட நினைத்து ''எத்திறம் உரவினோடு இணைந்து இருந்து ஏங்கிய எளிவே!'' என்று பகவானின் எளிமையை நினைத்து ஆறு மாதகாலம் மூர்ச்சித்து இருந்திருக்கிறார். ஸ்ரீராமானுஜர் தன்னைத்தானே மெல்ல தேற்றிக்கொண்டு எழுந்து, ''ஹே கிருஷ்ணா, ஹே யாதவக் குலத்தோன்றலே, அர்ஜுனனை உயவடைய வைத்ததுபோல எனக்கும் அருளினீரே,' என்று பெருமகிழ்ச்சி

கொண்டார். தன்னுடைய அந்த உணர்வை கீழேயுள்ள ஸ்லோகங்களால் வெளிப்படுத்தி பகவானைத் தொழுதார்.

**“ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்ரம் ஹே**
**க்ருஷ்ண, ஹே யாதவ ஹே ஸகேதி**
**அஜானதா மஹிமானம் தவேதம் மயா ப்ரமா**
**தாத் ப்ரணயேன வாபி**
**யச்சாபஹாஸாந்த மஸக்ருதோஸி விஹார**
**ம்ய்யாசன போஜனேஷு**
**ஏகோதவாய் யச்யுத தத்ஸமகவும் தத்க்ஷா**
**மயே த்வாமஹம ப்ரமேயம்”**

அதாவது, “அச்சுதனே! உன்னுடைய இந்த மஹிமையை அறியாத நான், கவனமின்மையாலும், அன்பினாலும் உன்னை நண்பனென எண்ணி, ஏ கிருஷ்ணா, ஏ யாதவா, நண்பா! என்று விளையாடும்போதும், படுத்திருக்கும்போதும், உட்கார்ந்திருக்கும்போதும், உண்ணும்போதும், பலர் முன்னிலை யிலும் உன்னை அவமதித்திருக்கிறேனே, அவை அனைத்தையும் பொறுத்தருளும்படி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்,” என்று அர்ஜுனனைப்போல் வேண்டிக் கொண்டார். அர்ஜுனனை பகவான் தன் எளிமையாலே பிரமிக்கச் செய்தபடி, என்னையும் ஆட்கொள்வார் என்று தமக்குள்ளேயே தேற்றிக் கொண்டார்.

காஞ்சியிலுள்ள பெரிய ராஜமார்க்கத்தில் நடந்தார். பல்லவ ராஜ்ஜியத்தில் ராஜமார்க்கம் என்பது அயோத்தியிலுள்ள ராஜவீதியைப் போன்றதொரு பெரிய வீதி. அத்திகிரி பேரருளாளன் சந்நதியில் வந்து நின்று திருப்பொலிந்த சேவடிகளை சேவித்து ஆனந்தக் கண்ணீர் மல்கியவராக புளகாங்கிதமானார். மீண்டும் மீண்டும் ஆனந்தத்தாலே உவகையடைந்தார். பகவான் விடியற் காலையிலேயே சட்டென்று மறைந்ததன் கருத்தறிந்து மீண்டும் அந்தக் கிணற்றிலிருந்து தீர்த்தத்தைக் கொண்டுவர துடித்தார். ஏதோவொரு பேரின்பத்தில் தோய்ந்தெழுந்தபடி இருந்தார்.

எந்தக் கிணற்றின் நீர் பருகுவதற்கு ஏற்றதோ, எதனால் பெரிய பிராட்டியார் உவகை அடைவார்களோ, அந்தக் குறிப்பறிந்து, தினமும் திருமஞ்சனத்திற்காகவும், பிரசாதம் செய்வதற்காகவும் கொண்டு வந்து சமர்ப்பித்தார். பகவானும் திருவுள்ளம் உகந்தார். இந்த தண்ணீரின் சுவை மிகமிக அருமை என தேவாதிராஜன் நினைத்தான்போலும். தளிகை அமுது பிரசாதங்கள் முன்பைவிட மிகவும் சுவையாக இருந்தன. திருவாராதனத்தை பகவான் மிகவும் உகந்து ஏற்றுக் கொண்டார். சாலைக் கிணறு தண்ணீரையே தினமும் மனமுவந்து ஏற்றுக் கொண்டார். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று ஜலத்தின் சுவை, மற்றொன்று ராமானுஜரின் கர ஸ்பரிசம். இவர் கைப்பட்டதன் காரணமாகவே நன்றாக உள்ளதென மற்ற சந்நதிகளின் சுவாமிகளும் நம்பினர். இந்த சாலைக் கிணறு இன்றும் தேவாதிராஜன் சந்நதியிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர்

தொலைவில் உள்ளது. ஸ்ரீராமானுஜர் தினந்தோறும் சாலைக் கிணற்றிலிருந்து நீர் இரைத்துக் கொண்டு பெரிய பெருமாள் (காஞ்சி வரதன்) சந்நதியிலுள்ள திருமடைப்பள்ளியில் கொண்டு சேர்த்து வந்தார். அந்த ஜலத்தைக் கொண்டுதான் பரிசாரகர்கள் அமுது படியை செய்து எம்பெருமானுக்கு சமர்ப்பித்தனர்.

மகானாகிய, அவதார புருஷராகிய ஸ்ரீ ராமானுஜரே இவ்வாறு நடந்து கொண்டது, ஒவ்வொரு பக்தனும் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு தகுந்த உதாரணம். மகானாக இருந்தாலும் பகவத் சந்நதியில் எல்லோரும் சமமே. யாரும் தன்னைத்தானே மகான் என நினைத்துக் கொள்ளக் கூடாது என்று நினைவூட்டுகிறார் போலும். இதற்கு நடுவே, காசி க்ஷேத்ரம் செல்ல எண்ணிய யாதவப் பிரகாசர், நடுவே ராமானுஜரைக் காணாது, தேடித்தேடி அலைந்தார். சற்றே கவலை கொண்டாலும், உடனே மகிழ்ச்சியும் அடைந்தார். காரணம், ராமானுஜரை நாம் முடிக்க எண்ணினோம்.

ஆனால், காலமே அவரை முடித்து விட்டது என்று நினைத்துக் கொண்டார். பிறகு தேடுவதுபோல் தேடி, போலியாக சிறிது நேரம் துக்கப்பட்டு, ஒருநாள் கழித்து மற்ற சிஷ்யர்களை அழைத்துக் கொண்டு காசி சென்றடைந்தார். அங்கு சென்று பாடங்களை நடத்திவிட்டு மீண்டும் காஞ்சிபுரமே செல்ல ஆயத்தமானார். மீண்டும் மூடுபல்லக்கில் எழுந்தருள, யாதவப் பிரகாசரின் சிவிகை வேத கோஷங்களுடன் புறப்பட்டது. இப்படி இருக்கையில், யாதவப் பிரகாசர், ராமானுஜருடைய குடும்பத்தாருக்கு என்ன பதில் உரைப்போம்? என்னை நம்பி அவருடைய தாயார், ராமானுஜரை ஒப்படைத்தாரே! காணவில்லை, வழி தவறிச் சென்று விட்டார்.

தேடிப்போன இடங்களிலெல்லாம், என் சிஷ்யர்களும் காணக் கிடைக்காது திரும்பி வந்து விட்டனர்' என்று சொன்னால் அது தன் கையாலாகாத தனத்தை வெளிப்படுத்துகிற மாதிரி ஆகிவிடுமே!' என்று மிகவும் வருத்தத்தோடு இருந்தார். அப்படி ஒருநாள் தன் சிஷ்யர்களுடன் கங்கையில் நீராடும்போது, மாக ஸ்நானம் செய்து மனமுருக கங்காதரனை பிரார்த்தித்தார். வேதத்திலுள்ள 'அகமர்ஷண ஸூக்தம்' என்கிற பாகத்தை உச்சரித்துக் கொண்டே ஸ்நானம் செய்தபோது, கோவிந்தன் கையில் (ராமானுஜரின் ஒன்றுவிட்ட சகோதரர்) ஒரு லிங்கம் வந்து சேர்ந்தது.

மிகவும் ஆச்சர்யம் அடைந்து அந்த லிங்கத்தை தன் குருநாதன் யாதவப் பிரகாசரிடம் காட்டினார். யாதவப் பிரகாசரும், சந்தோஷமுற்று, ''ஹே! கோவிந்தரே! கங்காதரனே, கங்கா ஸ்நானத்தின் பலனாக உம் கைக்கு கிடைத்திருக்கிறார். இப்படி யாருக்கும் கிடைத்ததில்லை என்பதால், நீர் ஒரு தெய்வப் பிறவி,'' என்று சொல்லி பாராட்டினார். யாதவப் பிரகாசரின் ஏனைய சீடர்கள் அனைவரும் இதைக் கண்டு அதிசயித்தனர். ''சிவபெருமானின் பூரண கடாட்சம் உமக்கு வாய்க்கப் பெற்றதே! அதுவே நீர் செய்த பாக்யம்'' என்று கூறி ஓரிடத்தில் அந்த லிங்கத்தை தற்காலிகமாக பிரதிஷ்டை செய்து, ருத்ரம், சமகம் சொல்லி அந்த லிங்கத்திற்கு அபிஷேகம் செய்தார் யாதவ பிரகாசர்.

பிறகு, ''இந்த லிங்கம் உம்மிடமே இருக்கட்டும்'' என குருநாதன் சொல்லி கோவிந்தரை மகிழ்வித்தார். கோவிந்தரின் கையில் இப்படி லிங்கம் கிடைத்ததால், இவரை 'உள்ளங்கை கொணர்ந்த நாயனார்' என்று அழைத்தனர். யாதவப் பிரகாசர் தன்

சிவிகையில் ஏறிக்கொள்ள, எல்லா சீடர்களும் 'சிவபெருமான் வந்தார். பார்வதி நேசன் வந்தார், கங்காதரன் வந்தார். ஹைமவதீ மணாளன் வந்தார்' என்று கட்டிய வசனத்தை கோஷித்தார்கள். இந்தப் பட்டாளம் மீண்டும் காஞ்சிபுரம் நோக்கிப் புறப்பட்டது. ராமானுஜர் இல்லாமலேயே, திரும்பிச் செல்கிறோமே என்கிற நெருடல் யாதவப் பிரகாசரிடம் இருந்தது.

எனினும், எல்லாம் கங்காதரன் செயல் என்று தனக்குள் சொல்லி மனதைத் தேற்றிக்கொண்டார். சில நாட்கள் கடந்தன. யாதவப் பிரகாசருக்கு உடல்நிலை சரியில்லாமல் போயிற்று. வழியில் ஒருமாத காலம் ஒரு கிராமத்தில் தங்கி நோய் தீர்ந்தவுடன் மீண்டும் புறப்பட்டனர். நான்கு மாதங்கள் கடந்து காஞ்சிபுரத்திற்கு வந்தனர். அங்கே ராமானுஜரைக் கண்டதும் அனை வருக்கும் பேராச்சரியம். முக்கியமாக யாதவப் பிரகாசர், கண்களில் நீர்த் துளிக்க, ''எப்படி காணாமல் சென்று விட்டீர். எங்கு போனீர்? சாப்பிடுவதற்கு என்ன செய்தீர்?

எப்படி, யார் துணையுடன் இங்கு வந்து சேர்ந்தீர்?'' என்று கேள்விமேல் கேள்வி கேட்டுத் தன் திகைப்பை வெளிப்படுத்தினார். ராமானுஜரோ, எல்லா துக்கங்களையும் மறைத்துக்கொண்டு, இவர்தானே கொல்ல நினைத்தார் என்கிற உண்மையையும் மறைத்துக் கொண்டு, நடந்த வரலாற்றை அப்படியே கூறி, இந்த காஞ்சி வரதனும் பெருந்தேவியும் வேடுவ, வேடுவச்சியாக வந்து தம்மைக் காப்பாற்றிய அற்புதத்தைக் கூறி விம்மி அழுதார். யாதவப் பிரகாசருக்கு நெஞ்சில் முள் தைத்தாற்போன்று இருந்தது. இருப்பினும் அதை வெளிக் காட்டிக்கொள்ள இயலாதிருந்தார்.

ராமானுஜரோ நடந்தவை எல்லாவற்றையும் மறந்துவிட்டு மீண்டும் யாதவப் பிரகாசரிடமே தொடர்ந்து படிக்கலானார். கோவிந்தன் என்கிற உள்ளங்கைக் கொணர்ந்த நாயனார், தம் கிராமமாகிய மழலை மங்கலம் அல்லது மேலமங்கலம் (தற்போது மதுர மங்கலம் என்றழைக்கப்படுகிறது) சென்று நடந்தவற்றை குடும்பத்தினரிடமும், கிராம மக்களிடமும் கூற அவர்கள் ஆச்சரியமடைந்தனர். அந்த லிங்கத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனர். கோவிந்தரும் மிகுந்த பக்தி சிரத்தையுடன் லிங்கத்திற்கு செய்ய வேண்டிய அபிஷேகங்களைச் செய்து பிரசாதங்களை நிவேதித்தார்.

இப்படி கங்காதரனின் பக்தியில் அவர் திளைத்திருந்தபோது, ஒருநாள் கனவில் சிவபெருமான் தோன்றினார். ''உள்ளங்கை கொணர்ந்த நாயனாரே! எம்மையடைந்து நீர் மிகவும் சந்தோஷத்துடன் உள்ளீர். யாமும் உம் பக்தி கண்டு பரவசமடைகிறோம். என் ரூபமான லிங்கம் உம் கையில் உள்ளது. அந்த லிங்கத்தை காளஹஸ்தி என்ற இடத்தில் பிரதிஷ்டை செய்து ஒரு கோயிலையும் நிர்மாணம் செய்வீராக'' என்று கூறினார். இந்தச் செய்தி கிராமம் முழுவதும் பரவியது. ஒரு கிராமமே காளஹஸ்தியை நோக்கி, கோவிந்தன் தலைமையில் புறப்பட்டது.

காளஹஸ்தி வந்து சேர்ந்த பிறகு சுவாமியை எங்கு பிரதிஷ்டை செய்வது என்று சிவபெருமானை நோக்கி கண்மூடி, நெக்குருக, மனமுருக வேண்டினார் கோவிந்தன். சிவபெருமானும் ஓரிடத்தைக் காட்டிக் கொடுத்தார். அங்கேயே லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இப்படி அமைந்ததுதான், தற்போதுள்ள காளஹஸ்தி க்ஷேத்ரம்.

*கேட்டவருக்கு அதை அப்படியே அள்ளித்தரும் பெருமானாகவே இங்கு சிவபெருமான் பிரதிஷ்டையானார். அதற்குக் காரணம் கோவிந்தனின் உள்ளொழுகிய பிரார்த்தனை தான்.*

*யார் இங்கு வந்து கஷ்டத்துடன் மனமுருக பிரார்த்தித்தாலும், அவர்களின் யோக்யதையை ஆராயாமல் உடனே அனுக்ரஹம் பண்ண வேண்டும் என்று கோவிந்தன் பிரார்த்தித்தபடியால், சிவபெருமானும் அப்படியே அருள்கிறார். இன்றும் பக்தர்கள் மனமுருக பிரார்த்தித்து, வேண்டிய வரம் கிடைக்கப்பெற்று வாழ்க்கையில் முன்னேறுகின்றனர். மேலும், இத்தலம் ராகு-கேது தலமாகவும் விளங்குவதால், சர்ப்பதோஷம் உள்ளவர்கள் அந்த தோஷம் நீங்க சிவபெருமான் அருள்பாலிக்கிறார்.*

*சிவபெருமான், உள்ளங்கை கொணர்ந்த நாயனாரையே கோயில் நிர்வாகம் செய்யும்படி செய்து, இலச்சினை, மோதிரம் கொடுத்து அங்கேயே தங்கும்படியும் செய்தார். கோயில் நிர்வாகம் முழுவதையும் கோவிந்தனே கவனித்துக் கொண்டார். இன்றளவும் சீரும் சிறப்புமாக கோயில் கொண்டாடப்படுகிறது. ஒரு சமயம் காஞ்சிபுரம், வரதராஜன் சந்நதியில் கைங்கர்யம் செய்யக்கூடிய இருவர் ஸ்ரீரங்கம் சென்று தன் ஆசார்யரான ஸ்ரீஆளவந்தாரை தரிசித்தனர். அவரை நமஸ்கரித்து, ஸ்ரீராமானுஜரைப் பற்றி பலவாறு புகழ்ந்து கூறினர். ''ஸ்ரீராமானுஜர் என்பவர் யாதவப் பிரகாசர் என்கிற வேதாந்தியிடம் பாடம் பயின்று வருகிறார்.*

*யாதவப் பிரகாசரோ, வேதங்களிலுள்ள முக்கிய பகுதிகளுக்கெல்லாம் தவறான அர்த்தங்களையே போதித்து வருகிறார். அதற்கு ஸ்ரீராமானுஜர் கண்டனமும் தெரிவித்து வருவதுண்டு. இப்படித்தான் ஒருசமயம், 'ஸத்யம், ஞானம், அனந்தம், ப்ரஹ்ம' என்ற வேத வாக்கியத்திற்கு தப்பான அர்த்தங்களை யாதவப் பிரகாசர் போதிக்க, அதைக் கண்டித்து ஸ்ரீராமானுஜர் மிகச் சரியான விளக்கங்களை மிக நேர்த்தியாக அளித்தார். அதைக் கேட்டு கோபமடைந்த யாதவர் ஸ்ரீராமானுஜரை மிரட்டவும் செய்தார்,'' என்று நடந்த விஷயங்களையெல்லாம் கூறினர்.*

***************

# எதிராசர் பேர் மொழி



**முன்னே பிறந்து–இறந்து மூது உலகில் பட்டாவல்லாம்**
**என்னே மறந்தனையோ என் நெஞ்சே – சொன்னேன்**
**இனி எதிரா சன்மங்கள் இன்று முதல் பூதூர்**
**முனி எதிராசன் பேர் மொழி.**

**எனது மனமே! இதற்கு முதற்காலமெல்லாம் பிறப்பதும் இறப்பதும் ஆகி. அநாதி ஸம்ஸாரத்தில் பட்ட பாடுகளை யெல்லாம் மறந்து விட்டாய் போலும். உன் பேதைமையை என் சொல்லுவது? உனக்கு ஓர் உறுதி கூறுகிறேன். அதாவது இன்று தொடங்கி பெரும்பூதூர் மாமுனியாகிய எதிராசருடைய திருநாமங்களை ஓது. அங்ஙனம் செய்தால் பிறவிகள் இனி உனக்கு உண்டாகமாட்டாது.**

***-பிள்ளை பெருமாள் அய்யங்கார்***

# வந்தேகுரு பரம்பராம்//



***நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ ஶுபக்ருத் வருஷம் சித்திரை மாதம் 22ஆம் நாள் குருவாரம் திருவாதிரை நக்ஷத்ரத்தில் அடியார்கள் கூடிமகிழ இனிதே நடைபெறும் -ஸ்ரீ பகவத் இராமாநுஜர் 1005ஆவது திருநக்ஷத்ர வைபவத்தில் அகமலர்ந்து அவர்பதத்தில் அடியேன் ஸமர்ப்பிக்கும் சிறுகவிதைப் பாமாலை.***

***--ஹேமா ராகவன், வயநாடு.***

ஸ்ரீமதே ஸ்ரீ வராஹ மஹா தேசி'காய நம://
ஸ்ரீமதே ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேசி'காய நம://

அகிலத்து உயிர்களெலாம் அகமகிழ மிகவிழைந்து /
அன்புடனே நீயளித்தாய் அருமறையின் விளக்கமதை!/
ஆன்மாவின் ஆனந்தம் உய்த்துணர வகைசெய்தாய்!/
ஆர்வலர்கள் நெஞ்சமதை அகலாத மணிச்சுடரே!//(1)

சித்திரையின் ஆதிரையில் சீர்மல்கு பெரும்பூதூர்/
பெற்றதுவே மிக ஏற்றம் பேரருளாய் நீ தோன்ற!/
நற்றவங்கள் செய்தவர்க்கே கிட்டுபெரும் பதந்தன்னை/
எட்டெழுத்து மந்திரத்தால் எமையடையச் செய்தனையே!//(2)

நாளும்நின் திருநாமம் நாவினிலே நின்றொலிக்க/
வாழும்வகை கண்டோர்கள் எழுமைக்கும் பேறுடையார்!/
பேழைக்குள் இரத்தினம்போல் நின்நாமம் எம்மனத்துள்!/
தாழ்வொன்றும் இல்லையினி உடையவரே! எங்கட்கே.//(3)

அருளாளன், அரங்கத்தான் திருநாராயணபுரத்தான்/
அனைவருடை அகங்குளிர அவர்மகிழத் தொண்டாற்றித்/
திரளாய்நின் அடிக்கீழே புகுந்தேத்தும் புனிதர்களை/
அருளாலே அரவணைக்கும் நின்திறத்தை என்சொல்கேன்?//(4)



பேராயிரம் கொண்ட பீடுடையோன் திருவருளால்/
நாலாயிரம் அகழ்ந்த நாதமுனி பின்னானான்/
ஓராயிரம் தலையான் உதித்தானிங் குவப்புடனே/
இராமாநுஜமுனிதாள் சென்னியின்மேல் ஓங்குகவே!//

ஆழ்வார் ஆசார்யர் திருவடிகளே ச'ரணம்//